ரிஜிஸ்டர்ட் நம்பர் 2041

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா
{ வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு தை மீ 9உ (22—1—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 39.


இனம்! இனம்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட லிவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.




விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீத கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பேனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.

விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (...) சென்னை.

## "குடி அரசு" நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் காகிதத்தின் ஒருபக்கத்தில் இடதுபுறத்தில் ஒரு அங்குல இடம் (மார்ஜின்) விட்டு வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம் விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் வர்வப்பு விஷயங்களும், பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் (ரிஜிஸ்டர்) நம்பரைச் சந்தா நெம்பராக நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாத வரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட்ட வி. பி. யை கௌரவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி டி. மதராஸ்.

இனம்! இனம்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பாசித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் துட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இஹம்! இஹம்!! இஹம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அசன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உரவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறுமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. மித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் தடுத்துவிடும்.
2. தளர்ந்து வலுவற்ற மெலிவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் குடைப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. பிழைத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஜீரண சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, திமிர்வாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் நாசம்செய்து பறந்தோடச் செய்து சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஜக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரிஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் சிலாக்கியமென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் எமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 45 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபால் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று கிருபையும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ நிவாஸ் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

## தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உடயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செ. | 1. | ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை | 1 | ரூ. 9—8—0 |
| செ. | 2. | பாரிஸ் பூக்கரைப் போர்வை | 1 | ரூ. 10—8—0 |
| செ. | 3. | ஷை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 | ரூ. 16—0—0 |
| செ. | 4. | காஷ்மீர் கை செசவுப் போர்வை | 1 | ரூ. 12—0—0 |
| செ. | 5. | ஜெர்மன் மோஹர்ணப் போர்வை | 1 | ரூ. 15—0—0 |

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

## ஆநந்த குணபோதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்களுள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளிநாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

## முத்து மாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.


22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்ட படிவத்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$" x $2\frac{1}{2}$" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# பலனை அனுபவிப்பவர் பார்ப்பார் பழியை ஏற்றுக் கொள்பவர் பார்ப்பனரல்லாதார்.

கைவல்ய சாமியார் எழுதியது

காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்தை மகாஜனசபை மண்டபத்தில் கனம் ஸ்ரீனிவாசய்யங்கார் திறந்து வைத்த பொழுது பேசின பேச்சில் "தமிழர் கட்சி என்று சொல்லிக்கொள்ளும் பணக்கால் கட்சியினர் பாரதியார் பாடல்களை பள்ளிக்கூடங்களில் படிக்கவொட்டாமல் தடுத்தார்கள்' என்றும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி 'பாரதியார் பாட்டைப் பள்ளிக்கூடங்களில் படிக்க முடியாமல் கவர்மெண்டார் தடுத்து "வந்திருக்கிறார்கள் என்றும் பேசினதாகச் சுதேசமித்திரனிலும் "பாரதியார் பாட்டை பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் படியாமல் தடுக்கச் சிலர் முயற்சி செய்கின்றனர். அதையெல்லாம் நீங்கள் பொருட்படுத்தக்கூடாது" என்று சத்தியமூர்த்தியார் பேசினதாகத் 'தமிழ் நாட்டி'லும் இருக்கிறது. இரண்டுபேர் பேச்சும், இரண்டு பேப்பர்களிலும் மாறி மாறியும் ஒன்றிலுள்ளது ஒன்றிலில்லாமலும் இருப்பதற்குக் காரணம் எப்படியோ இருக்கட்டும். பேச்சிலும் எழுத்திலும் பிராமணரல்லாதார் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, பணக்கால் கட்சி, தமிழ் கட்சி, பின்னேக்கும் கட்சி, உத்தியோக வேட்டைக் கட்சி என்று சமயத்திற்கும் கூட்டத்திற்கும் எதைச் சொன்னால் பொருந்துமோ அதைச்சொல்லிப் பார்ப்பான் ஒருவனொழிய மற்றவர்கள் தலையில் கைவைப்பதில் பிரசங்கிகளும் அவர்கள் விட்டதைப் பாப்பார ரிப்போர்டர்களும், இவர்களும் விட்டதைப் பத்திரிகை ஆபீஸர்களும் செய்தே வருகிறார்கள். இதைக் கேட்டுச் சந்தோஷமாக கை தட்டும் பார்ப்பனரல்லாதவன், பின்னால் தன்பிள்ளை பிச்சை எடுத்தாலும், தற்காலமுள்ள சில காரியங்கள் நடக்கவும் தற்கால பெருமைக்கும் பக்கத்திலிருந்து கை தட்டுகிறான். ஜஸ்டிஸ் கட்சி தோற்ற பின் முன்னணிக்கு வந்த ராஜீய கட்சி எவ்வளவுதூரம் முன்னணிக்கு வந்திருக்கிறது? எவ்வளவு ராஜாங்கத்தை வணங்கவைத்திருக்கிறது? இக்கட்சிக்காரர்கள் உத்தியோகத்திற்காக எவ்வளவு தூரம் பங்களாவை விட்டு நிற்கின்றார்கள்? உத்தியோகங்களெல்லாம் சர்க்கார் எடுத்து விட்டார்களா? ஆபீசிலே ஒளிந்து கொண்டதா என்பதைசிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

பாரதியாரை எனக்குத் தெரியும். அவர் மைலாப்பூரிலிருந்த சமயம் பாப்பார்கள் அவரைக்கிட்ட சேர்த்தவே இல்லை என்பதும் பாப்பார்கள் அல்லாதவர்களே இவர் போஷணைக்குப் பணம் கொடுத்தார்களென்பதும் எனக்கு நேரில் தெரியும். மைலாப்பூரில் டாக்டர் நஞ்சுண்டராவ் என்கிற மகாராஷ்டிரர் ஒருவர் இருந்தார் என்பதை நீங்கள் கேட்டிருக்கலாம். சுவாமி விவேகாநந்தருடைய சிஷியர் குட்வீன் என்னும் வெள்ளைக்காரருடைய பெயரால் குட்வீன் கம்பெனி என்று இங்கிலீஷ் மருந்து ஷாப் ஏற்படுத்தப் பட்டு இன்னும் நடந்து வருகிறது. இதன் சொந்தக்காரர் டாக்டர் கோவிந்தராஜ பிள்ளை. இந்த ஷாப்பில் டாக்டர் நஞ்சுண்ட ராவின் மருந்துகளெல்லாம் விற்கப்படும் இவருக்கும் இந்த ஷாப்பிற்கும் நெருங்கின சம்பந்தமுண்டு. கோவிந்தராஜ பிள்ளை யாதவகுலத்தவர். இவர்கள் இரண்டுபேரும் மைசூர்வாசிகள். ஜாதி இரண்டே ஒழிய சிநேகிதத்திலும் குடும்ப விவகாரங்களிலும் வித்தியாச மில்லை. திக்கற்றவர்கள், ஏழைப்பிள்ளைகள், தேசபக்தர்கள், ஆசார சீர்திருத்தக்காரர்கள் சந்நியாசிகள், இப்பேர்ப்பட்டவர்களுக்கு பணமும் உபசரணையும் செய்து வந்தார்கள். குட்வீன் ஷாப்பிலிருந்தே பணம் உத்தரவு படி அநேகருக்குக் கொடுக்கப்படும். எனக்கும் இவர்கட்கும் அநேக நாளாக சிநேகமுண்டு. 20 வருடத்திற்கு முன் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே பாரதியாரும் அவருடைய பந்து ஒருவருமிருந்தார்கள். அவருடைய பந்து குட்வீன் வகையரால் ஏற்பட்ட ஏழைப்பிள்ளைகளின் பள்ளிக்கூடத்திற்கு ஒரு உபாத்தியாயராக ஏற்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு மாதா மாதம் கொடுக்க ஏற்பட்ட பணத்திற்குமேல் அவர் அதிகம் பற்றிக்கொள்வார். அதற்கு சமாதானமும் கொடுத்து வந்திருக்கிறார். அந்தக்காலத்தில் மைலாபூர் பாப்பார்கள் பாரதியாரை சேர்த்தது மில்லை. யாதொரு உதவியும் செய்தது மில்லை. சீனிவாசய்யங்கார் இவர் முகத்தைக்கூடப் பார்த்திருக்கமாட்டார். அந்தக் காலத்தில் கல்கத்தாவில் அரஸ்டுகள் அதிகம். தங்களையும் போலீஸ்காரர்கள் சேர்த்து விடுவார்களோ என்று பயந்து பாரதியாரைப்போன்ற ராஜீய வாதிகளைக் கண்டால் பேசுவதுகூடக்கிடையாது. பாபுசந்திரபால் சென்னைக்கு வந்து இரண்டு பிரசங்கம் செய்தார். பஞ்சாப்பிலும் கல்கத்தாவிலும் இவருடைய சிநேகிதர்களை அரஸ்டு பண்ணிவிட்டார்கள் என்கிற தந்தி வந்த உடனே மூன்றும்நாள் பிரசங்கம் நின்று விட்டது. டாக்டர் நஞ்சுண்டராவ் தன் வீட்டில் சந்திரபாலைக்கூட்டி வந்து மூன்று நாள் பிரசங்கம் செய்யவைத்தார். அதற்கு இப்பொழுது ராஜீயவாதிகளென்று சொல்லும் பாப்பார்கள் யாரும் வரவில்லை. அந்த காலத்திலுங்கூட தமிழனின் பணமே ராஜீய வாதிகளுக்கு செலவு செய்யப்பட்டது. இப்பொழுது சீனிவாசய்யங்கார் பாரதியாரை நினைத்து அழுகிறார். அன்றியும் அவர் பாட்டை பணக்கால் கூட்டம் படிக்காமல் தடுத்ததாகப் பழியும் போடுகிறார். இவை தமிழ் கூட்டத்தைக்கெடுக்கும் வஞ்சனையே ஒழிய வேறு என்ன? பாரதியாரின் படத்தைத் தான் ஸ்ரீ சீனிவாசய்யங்கார் பார்த்திருப்பார். பாரதியார் போஷணைக்கு வாடிய முகத்தைக்கண்டு தமிழர்களே அவருக்கு உதவினார்கள். பார்ப்பனரல்லாதவர்கள் உண்டு பண்ணும் பலனை அனுபவிக்க பார்ப்பான் எப்படியும் வந்து விடுவான், அதோடு நிற்காமல் பழியும் சுமத்தி அவர்கள் செய்த நன்மைகளையும் வெளிக்கு வராமல் செய்வதே அவர்கள் வழக்கமாகவிருக்கிறது. எதற்கும் தங்கள் பேரே முன் நிற்க வேண்டு மென்கிற எண்ணமொன்றே ஒழிய வேறு ரகசியமொன்றுமில்லை. இதையெல்லாம் நீங்களும் தெரிந்து கொண்டு புத்திக்கு வேண்டிய சமயோஜித சக்தியத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

## புரோகிதத்தை அறவே ஒழித்தார்

கானாடு காத்தான், உயர் திருவாளர் வயி.சு. ஷண்முகம் செட்டியார் தமது தாயாருடைய வருஷாப்திகத்திற்குப் பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் அறவே ஒழித்து சுமார் 2000 ஏழைகளுக்கு அன்னமளித்தார் என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

## திருச்சி மருத்துவ குல சங்கத்தின் ஆண்டு விழா.

17—12—27-தேதி ஸ்ரீ வேணுகோபால் நாயுடு தலைமையில் ஷை ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அதில் திருவண்ணாமலை கோயில்வழக்குத்தக்கு அங்கத்தினர்கள் நிதிஉதவி செய்யவேண்டு மென்றும், அநீதியான மனு சாஸ்திரத்தை சுட்டெரிக்க வேண்டு மென்றும், உயர்வு தாழ்வுகற்பிக்கும் வருணாசிரம மகாநாடு கூட்டுவதைக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. சங்கத்தின் 23—12—27-தேதி கூட்டத்தில் சொற்பொழிவுகளும் சங்க உத்தியோகத்தினர்கள் தேர்தலும் நடைபெற்றதென ஷை சங்க காரியதரிசி எழுதுகிறார்.

## இவ்வாரத்தில் பார்ப்பனீயத்தை பகிஷ்கரித்த வீரர்கள்.

(1) ஸ்ரீ கி. மாணிக்க உடையார்
சிங்களாந்தபுரம்
முசிறி தாலூகா
(2) ரா அங்கமுத்து
சித்தாம்பூர்
முசிறி தாலூகா
(3) மெய்யப்ப செட்டியார்
N. M. P. L. ஏஜண்டு
மிம்பியா.
(4) சு. கந்தசாமி உடையார்
சித்தம்பூர், முசிறி தாலூகா.
(5) எம். எஸ். ராமசாமி முதலியார்
மேவாணி, கோபி தாலூகா.

## மதுரை செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம்.

சென்ற 31—12—27ல் சங்கத்தலைவர் P. V. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் "சமூக முன்னேற்றம்" என்னும் விஷயத்தைப்பற்றி திருகந்தசாமி முதலியார் அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்

## நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்

ஷை சங்கத்தின் முதலாவது வருட பூர்த்தி விழா 8—1—28ல் நடைபெற்றது. அதற்கு புரையார் நகர்வாசியும் நாடார் மகாஜன சங்கப் பிரசிடெண்டு மிராசுதாரும் பிரபலஸ்தருமான ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார் விருது நகருக்கு திலகமாய் விளங்கும் உயர்தரக் கலாசாலையில் தலைமை உபாத்தியாயராயிருந்து திறம்பட நடாத்தி வரான காலஞ்சென்ற ஸ்ரீமான் என். எஸ். மாணிக்கவாசக நாடார் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா அக்கலாசாலையிலேயே ஸ்ரீமான் வெ கனகசபை நாடார் அவர்களாலேயே நடத்தப் பெற்றது. அவ்வமயம் அறிஞர் பலர் சொற்பெருக்கு நிகழ்த்தியதுடன் உதை பந்தாட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு அளிக்கப்பட்டது என்று துணை அமைச்சர் பி. தனகோடி நாடார் தெரிவிக்கிறார்.

# திருவள்ளுவரும் மக்கட்பேறும்

சாமி சிதம்பரனார் எழுதுவது

## கட்டுரை 8

மக்கட்பேறு வேண்டுமென்பது எல்லா நூல்களினும் பல படியாகக் கூறப்படுகிறது. இல்வாழ்வான் அடையவேண்டிய செல்வங்களுள் முதன்மையான செல்வம் மக்கட்பேறென்றும் சொல்லப்படுகின்றது. மக்கட்பேற்றை ஒருவரும் விரும்பாமலிருப்பார்களாயின் உலகம் எவ்வாறு நடைபெறும்? உலக வளர்ச்சிக்கே மக்கட்பேறு காரணமாக விருக்கின்றது. மக்கட்பேறு எதற்காகவென்று தமிழ்நூல்களில் ஆராய்வோமாயின் நாட்டைக் காப்பாற்றுவதற்கும், மக்களுக்கு உதவி செய்வதற்குமே யென்பது நன்கு விளங்கும். வடமொழி நூல்களிலோ, தமக்கு வரும் நரகத்தை நீக்கிக்கொள்வதற்காக புத்திரனைப் பெறவேண்டுமென்று கூறப்படுகின்றது. இருமொழியாளரின் கருத்தும் உலக வளர்ச்சியைக் கருதியதே யாகுமென்று நாம் கொள்ளலாம்.

ஒருவன் இறந்த பின்னும் தன் பெயர் உலகில் நிலவ வேண்டுமாயின் மக்கட்பேற்றை யடைய வேண்டும், ஆனால் உலகத்திற்கோ, சமூகத்திற்கோ ஊழியஞ் செய்யும் பெரியோர்களும், கல்வி நிறைந்த பெரும் புலவர்களும் தங்கள் பெயரைத் தங்களுடைய செயற்கருஞ் செயல்களால் உலகில் நிலைத்து விளங்குமாறு செய்யலாம். சாதாரண மக்கள் தங்கள் பெயரை நிலைக்கச் செய்வதற்கு வேறு வழியில்லை. அவர்கள் மக்கட்பேறு ஒன்றால்தான் தம் பெயரைப் பிறர் அறியும்படி செய்ய முடியும். அறிவற்ற மக்களைப் பெறுவோர்க்கு யாதொரு புகழுமில்லை. அறிவுள்ள மக்களுடையவர்களே சிறந்தவர்களாவார்கள். இதனை (1) "ஒருவன் பெறக்கூடிய செல்வங்களுள், அறியத் தக்கவைகளை யறிந்த மக்கட் பேறல்லாத பிற செல்வ மிருப்பதாக யாம் அறிவது ஒன்றுமில்லை" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

தம்மக்களை நல் வழியில் நடக்கும்படி செய்வதற்குக் கடமைப்பட்டவர்கள் பெற்றோரே யாவார்கள். மக்கள் தீய காரியங்களைச் செய்து பிறர் பழிக்கும்படி நடந்துகொள்ளுதல் கூடாது. அவர் தீய செயலைச் செய்யும்போது அவர்களை எந்த விதத்தினாலும் தடுத்தல் வேண்டும். மற்றும் பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் முதலிய கெட்ட குணங்களைப் பிள்ளைகளிடம் அணுகாதவாறு செய்ய வேண்டும். மனச்சாட்சி, உண்மை, வஞ்சகமின்மை, கீழ்ப்படிதல், இரக்கமுடைமை, இறுமாப்பின்மை, சகோதரத்துவம், ஒற்றுமை முதலிய நற்குணங்களைத் தம் மக்களுக்குண்டாக்க வேண்டும். இத்தகைய மக்களைப் பெற்றவர்களுக்கு எப் பிறப்பினும் தீமையுண்டாகாது. இதனை (2) "எழு பிறப்பினும் துன்பங்களுண்டாகா. பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய மக்களைப்பெறுவாராயின்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஒருவருக்குப் பொருள் அவர்தம் மக்களாவர். ஏனெனில், தமக்குப்பிறகும், தம் பெயர் உலகில் விளங்குமாறு செய்து கொண்டிருக்கின்றனர். அம்மக்களின் பொருள், தந்தையால் தேடிக்கொடுப்பதன்று; அம்மக்கள் செய்யும் நல்வினையாலும், தீவினையாலும் வரும் பயனேயாகும். ஆதலால் பெற்றோர்கள் தம் மக்களுக்குச் செய்யுங் கடமை அவர்கள் நல்வழியிற் சென்று நல்வினை புரியுமாறு செய்வதேயாகும். இதனை (3) "தம் மக்களைத் தமது பொருளென்று சொல்லுவர். அம்மக்களின் பொருள் அவர்கள் செய்யும் நல்வினையாலும், தீவினையாலும் உண்டாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

மக்களைப் பெற்றவர்கள் அவர்களால் அடையும் இன்பம் பல. பெற்றோர் உணவுவகையிலும் மக்களால் இன்பமடைவர். தமக்கு அன்புடையார் செய்யுந் தொழில்கள் அனைத்தும் இன்பமாகத் தோன்றுதலியல்பு. தமக்கு வெறுப்புடையார் செய்யுஞ் செயல்கள் யாவும் வெறுப்பாகத் தோன்றுவது மியல்பு. மக்களின் மீது அன்பில்லாத பெற்றோர்களைக் காண முடியாது. மக்களிடென்றல்ல, பறவைகளினும், விலங்குகளினும் மற்றைய உயிர்களினும் அவ்வாறுதான். ஆகையால் தம்மக்கள் செய்யும் செயல்கள் முழுதும் இன்பமாகத் தோன்றுமாம். நாம் உணவு கொள்ளும்போது ஏதேனும் தூசுகள் அவ்வுணவில் விழுந்துவிட்டாலும், நமது உணவை அழுக்குடைய கைகளாற் பிறர் தொட்டாலும் உண்ணுவதற்கு ஒருப்பட மாட்டோம். ஆனால் பெற்றோர்கள் தாம் உண்ணும்போது, தம் குழந்தைகள் தமது அழுக்கடைந்த கையால் அவர்கள் உண்ணும் உணவை அளைந்தால் அதனை அமிழ்தத்தினும் இனிய உணவாகக் கொள்ளுவார்கள். அன்றியும் தம் பிள்ளை உண்ட சோற்றின் மிகுதியை இன்பமோடு உண்ணும் தாய்மார்களை இந்நாளிலுங் காணலாம். தந்தைமார்களும் அதனை இன்பமாக உண்ணுவதையுங் காணலாம். இதனை (4) "அமிழ்தத்தைவிட மிகவும் இனிமையுடையதாகும், தம் மக்களின் சிறிய கையினாற் பிசைந்த சோறு" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

மற்றும் மக்களைப் பெற்றவர்கள் உடலின்பத்தையும், செவியின்பத்தையும் பெறுவார்கள். பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இரு கைகளாலும் அன்பு ததும்ப வாரியெடுத்து, உச்சி முகர்ந்து முத்தமிட்டு, மார்புறத் தழுவிக் களிப்புறுதலைக் காண்கின்றோம். பொதுவாக யாருக்குமே சிறு குழந்தைகளிடத்தில் அன்பும் அவர்களைத் தூக்கி விளையாடுவதில் விருப்பமும், அவர்கள் மொழியைக் கேட்பதில் மகிழ்ச்சியும் இருப்பதைக் காணும்போது, பெற்றோர்களுக்கு இவ்வாறு செய்வதில் எவ்வளவு இன்பமிருக்கின்றது என்பதை அளந்தறிய வல்லார் யார்? இதனை (5) "தம்மக்களின் உடம்பைத் தொடுதல் தமது உடலுக்கு இன்பமாகும். அவர்களின் சொற்களைக் கேட்டுக்கொண்டிருத்தல் காதுக்கு இன்பமாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

இசைக் கருவிகளிற் சிறந்தன புல்லாங்குழலும் யாழுமாகும். இவ்விரண்டும் பண்டைத் தமிழ் நாட்டு இசைக் கருவிகளாகும். புல்லாங்குழலின் இனிய இசையைக் கேட்க விரும்பாதவர் யாவர்? இவ்விரண்டும் சிந்தைக்கும் செவிக்கும் தெவிட்டா இன்பத்தை யளிக்கும் தீஞ்சுவை யுடையனவன்றோ? இவற்றினுஞ் சிறந்த இன்பத்தை யளிக்கும் ஓசையொன்றிருக்குமாயின் அதன் பெருமையைக் கணக்கிட முடியுமோ! அத்தகைய இன்பவோசை குழந்தைகளின் மழலைச் சொற்களேயாகும். குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேளாதவர்களே புல்லாங்குழலின் ஓசையையும் யாழின் இசையையும் இனிதென்று கூறுவார்கள். குழந்தைகளின் குதலை மொழிகளின் சுவையை அறிந்தவர்கள் அவ்வோசைகளை இனியதென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதனை (6) "குழலின் இசை இனிது, யாழின் இசை இனிது என்று சொல்லுபவர், தம்மக்களின் மழலைச் சொற்களை கேளாதவர்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் உதவி இன்னதென்பதை யறிந்திருத்தல் வேண்டும். சில பெற்றோர்கள், பிள்ளைகளைச் செல்வமாக வளர்ப்பதும், தாங்கள் தேடிய பொருள்களை அவர்களுக்குக்கொடுப்பதுந்தான் தமது கடமையென எண்ணியிருக்கின்றனர். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவித்து உயர்ந்த அரசாங்க வேலையிலமர்த்துவதற்குப் பெரிதும் முயல்கின்றனர். ஆனால் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் முதன்மையான கடமை அவர்களை நாட்டுத் தொண்டர்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும் விளங்கச் செய்வதேயாகும். சமூக நலத்தைக் கருதியோ, மொழி நலத்தைக் கருதியோ நடைபெறும் எந்தப் பொதுக்கூட்டங்களிலும் முதன்மையாக விளங்கும்படியான பெருமையை தங்கள் பிள்ளைகளுக்குச் செய்து வைக்கவேண்டும். இதுவே தந்தையின் முதன்மையான கடமையாதலால், தமது பிள்ளைகளுக்கு அடிமைக் கல்வியைப் போதிக்காமல் தேசீயக் கல்வியைப் போதிக்க வேண்டும். தேசீயக் கல்வியைக் கற்றவர்கள்தான் பொதுஜன ஊழியத்தில் விருப்பமுடையராவர். இளமைப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு நாட்டின் பெருமை, சமத்துவம், உண்மைக் கொள்கை, சுயமரியாதை கைத்தொழில் முதலியவற்றைப் போதித்தால், அக்குழந்தைகள் பிற்காலத்தில் பெருந் தேசியவாதிகளாகவும், சமூக ஊழியர்களாகவும், சமரசவாதிகளாகவும், சுயமரியாதை உள்ளவர்களாகவும் விளங்குவார்களென்பது திண்ணம். இதற்குத் தேசீயக் கல்விக் கழகங்கள் தொழிற் கல்விக் கழகங்கள் நாட்டில் மிகுதிப்பட வேண்டும். இப்பொழுதிருக்கும் அடிமைக்கல்வி நிலையங்களெல்லாம் அடியோடொழிய வேண்டும். தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை (7) "தந்தை மகனுக்குச் செய்யும் கடமையாவது, அவனை எந்தச் சபையிலும் முதலிடத்திலிருக்குமாறு செய்தலாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதால் அறியலாம்.

பெற்றோர்கள் தங்களைவிடத் தமது மக்களை உயர்ந்த நிலையடையுமாறு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் தமக்கும் ஒருவித பெருமை கிடைக்கும் பெற்றோர்களைவிடப் பிள்ளைகள் சிறந்த அறிவுடையவர்களாயிருப்பது கண்டு உலகத்தாரனைவரும் பெரு மகிழ்ச்சி யடைவார்கள் இயற்கையிலேயே உயர்ந்த அறிவுடையவர்களாயிருக்கின்ற பெற்றோர்கள், தமது மக்களையும் தம்மைப் போலவே அறிவுடையவராகச் செய்தல் வேண்டும். இன்றேல் தமது கடமையைச் செய்யத் தவறியவர்களாவார்கள். பேரறிவு படைத்தவர்கள் தம்மைப் போலவே தமது மக்களையும் அறிவுடையவராகச் செய்வதுதான் உலகத்தார்க்கு மகிழ்ச்சிதரத்தக்க செய்கையாகும். இதனை (8) "தம்மைப் போலவே தம்மக்கள் அறிவுடையாயிருத்தலே இப்பெரிய உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் இனிமை தரத்தக்க செயலாம்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

மக்கள் தங்களைப் பெற்று வளர்த்து அறிவுடையவர்களாக்ச் செய்த தாய் தந்தையர்களுக்குச் செய்யவேண்டிய கடமை யாதென்பதை யாராய்வோம். நல்ல செயல்களையுடைய மக்களின் பெற்றோர்க்கு நற் பெயரும், தீய்ச் செயல்களையுடைய மக்களின் பெற்றோர்களுக்குக் கெ

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க).

# ஆலயப் பிரவேசம்.

கோவை ஸ்ரீமான் C. M. ராமச்சந்திரம் செட்டியார் B. A. B. L. எழுதுவது.

தற்காலத்தில் ஆலய பிரவேசத்தைப்பற்றி தர்க்கங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. நமது தென்னாட்டில், இந்த விஷயம் ஒரு முக்கியமானதாய் ஏற்பட்டுக்கூடிய சிக்கிரத்தில், ஒரு முடிவு கட்ட வேண்டியதாய்விட்டது. ஒருபக்கத்தில், ஆதித்திராவிடர்கள் பொதுக் கோவில்களில் புகவேண்டும் என்று போராடுகிறார்கள். மற்றொரு புறத்தில் பிராமணரல்லாதார் பிராமணர்களைப் போல் அர்த்த மண்டபம் மட்டும சென்று பூஜையைத் தாங்களே செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்கிறார்கள். நாடார்கள் சில ஜில்லாக்களில் எங்களைக் கோயிலுக்குள் விடுவதென்ன? மற்ற ஜில்லாக்களில் எங்களைக் கோயிலுக்குள் விடாமல் இருப்பதென்ன?. என்ற ஏற்றத் தாழ்ச்சியெடுத்துக்காட்டுகிறார்கள். சில கோயில்களில் வாணிகவைசியர் போன்ற மேல் வகுப்பு என்கின்ற ஜனங்களையும் விடாததற்கு என்ன காரணமென்ன என்கிறார்கள். மலையாள நாட்டிலோ தமிழ் பேசாத வேறு ஜாதியார் அனைவரையும் பிராமணரல்லாதவர்களானால் வெளியில நிறுத்தி விடுகிறார்கள். இவ்விதமாக நமது தென்னாட்டில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களைச் சிந்தித்துச் சிந்தித்து இதை விலக்கி ஒருமைப்படுத்த வழியுண்டோ என ஏங்கி நிற்கிறார்கள். சிலர் சண்டையிட்டு மெய்ப்பை முற்புகுத்த வேண்டுமென்று வருகிறார்கள். சில நாட்களாக பல நண்பர்கள் இவ்விஷயமாகப் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டு நாடு முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார்கள். நியாயஸ்தலங்களில் வழக்கு இட்டும நியாயம் பெற விரும்புகின்றனர். ஆனால் தற்கால ஆங்கில நியாயஸ்தலங்களில் சமய விஷயமான இவ்வித போராட்டங்கள் சீக்கிரத்திற்குள்ளாக நியாயம் பெறுதல் அரிது, சமீபத்தில் இவ்வாலயப் பிரவேசத்தைப் குறித்து திருவண்ணாமலையில் நடந்த நீதி மன்றத்து வழக்கு ஒன்றில் சமய நிலைய பரிபாலன சங்கத்தின் தலைவரான சர். டி. சதாசிவய்யர் கொடுத்த வாக்கு மூலத்தை வாசித்தவர்கள் இவ்வாலயப் பிரவேச விஷயத்தை மறுபடியும் ஆராய்ச்சி செய்வதற்குத் தகுந்த எண்ணங்கள் கிடைத்திருக்கின்றன. பரிசுத்தவான்களாயிருந்தால் எவ்வருணத்தாரும் ஆலயப்பிரவேசம் செய்யலாம என்பது தெளிவு. ஆனால் நெடுங்காலபழக்கத்தினால் சில வகுப்பார்களை ஆலயத்திற் பிரவேசிக்க நியாயஸ்தலத்தார் ஒப்புக்கொள்ளவில்லை என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள். இவர்களுடைய அபிப்பிராயத்தை வைதீகப் பிராமணர்கள் ஒத்துக்கொள்வது அரிது' சமீபத்திலே-சுந்தராமய்யர் அவர்கள் இவ்வித விஷயத்தில் தீவிர மாறுதல்கள் கூடாதென்று வற்புறுத்திப் பேசி இருக்கிறார்கள். அதிகாரம் அநுபவித்தவனுக்கு அவ்வதிகாரத்தை விட்டுக் கொடுக்கச் சற்றேனும் மனம் இரங்குமா? அதுபோல ஆலய ஏற்பாடுகளைத் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்த சில வகுப்பார்களை எல்லா வகுப்பினர்க்கும் திறந்து விடச் சொன்னால் எளிதில் விட்டுக்கொடுக்கச் சம்மதிப்பார்களா?

ஆலயப்பிரவேச விஷயமாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடியானது தென்னிந்தியாவில் இருக்கிறதேயொழிய வட இந்தியாவில் இல்லை. வருணாசிரமதர்மம் நிலைபெற்றுள்ள ஆரிய நாடான வட இந்தியாவில் எந்த வருணத்தாரும் ஆலயங்களில் பிரவேசிக்கலாம். இந்து சமயத்தினன் எவனும் தான் ஆராதிக்கும் தேவதையைத் தொட்டு நமஸ்கரிக்கலாம். கோகர்ணம் காசி விஸ்வநாதம் பூரி ஜகந்நாதம் பண்டரி புரம் இக்கோயில்களில் எவரும் தூாளமாக சென்று ஸ்வாமியைத் தொழுது சேவை பண்ணிக் கொண்டு வரலாம். தடுப்பார் எவரும இல்லை.

ஆனால் ஒரு குலத்துக்கொரு நீதி இல்லாத திருவள்ளுவர் பொய்யா மொழியை மறையாகக் கொண்ட இத்தமிழ் நாட்டிலே ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒவ்வொரு வரையறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாங்கள் வழிபாடு செய்யச் செல்லும் கோயில்களிலே இவ்வித மாறுபாட்டு விசித்திரக் கொள்கைகள் எப்போது எவ்விதம் உண்டாயின என்பது ஆராய்வது மனோற்சாகம் கொடுக்கக் கூடிய ஒரு செய்கையாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையார் அருளின போது சில வகுப்பார்கட்கு மட்டும் நன்று என்று கூறவில்லை. 'கோலக்கோபுரக் கோகரணம் சூழாக் கால் களாற் பயனென்' என்று அப்பர் சுவாமிகள் கூறின போது சில வகுப்பார்களுடைய கால்களை மட்டும் கூறவில்லை. ஆதிகாலத்தில் எல்லாக் கோயில்களும் எல்லா வகுப்பார்களுக்குமே அமைக்கப்பட்டன என்று அக்காலத்துச் செய்யுள்களால் அறிகிறோம். சைவசமயத்தை புறக்கணித்து சமணம் புகுந்த அப்பர் மறுபடியும் சைவம் ஆனபோது வீரட்டானேஸ்வர் ஆலயத்தில் புகவிடப்படார் இக்காலத்தில் சமயம் மாறப் பின் வந்தவனுக்கு இவ்விதப்பிரவேசம் கிட்டுமா? ஆகையால் அக்காலத்து தாாளசிந்தைஎன்னே! மற்றும் சைவ வைஷ்ணவ ஆசாரியர்கள் அவதரித்த காலத்தில் இவ்வகுப்புப் பிரிவினைகள் அதிகமாகத் தொடங்கின. ஆனால் அப்போதும் தாழ்ந்த வகுப்பினன் ஈசுர உள்ளத்தனாய் இருந்தால் அவனை ஏற்றுக்கொண்டார்கள். மேல் வகுப்பினன் பக்தி யில்லாமற் போனால் கீழ் தள்ளி விட்டார்கள். இந்தவழக்கத்தை

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவாரவர் செல்வமதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கே காந்தர் அல்லாராகில்

அங்கமெலாம் குறைந்த ழுகுதொழுநோயாராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்

கங்கைவார் சடைக்கரந் தார்க்கன்பாராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"

என்ற அப்பர் பாசுரத்திலும்

"இழிகுலத்தவர்களேனும் எம்மடியவர்களாகில்,'
"சாதியந்தணர்களேனு நுமர்களைப் பழிப்பராகில் புலையர் போலும்"

என்ற ஆழ்வார் பாசுரங்களிலும் காண்கின்றோம். பிற்காலத்தில் தோன்றிய ஸ்ரீவைஷ்ணவர்

"பாதியாய் அழுகிய கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும்படைத்தாரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பாராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் அடிகளாவார்'

என்று அதே அபிப்பிராயத்தைக் கூறி இருக்கின்றனர்.

ஆகவே பரிசுத்தமாயிருக்கும் போது வருணத்தைக் கவனிக்கத்தகாது என்று அன்னார் சொல்லியிருக்கின்றனர். அக்காலத்திலேயே இதைப்பற்றிப் பெருங்கிளர்ச்சிகள் உண்டாயிருக்கின்றன என்பதற்குத் திருநாளைப்போவாரான நந்தனார் சரித்திரத்தாலேயே தெரிகிறோம். அக்கிளர்ச்சி நெடுநாள் இருந்தபோதிலும், மிக்க பயன் பெறவில்லை எனலாம்.

தற்காலத்தில் மீண்டும் உற்பத்தியாகி இருக்கும் கிளர்ச்சி எவ்விதம் எவ்வளவு விரைவில் வகைகூடுமோ அளவிட முடியாது.

பிறசமயிகளான மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் துஜஸ்தம்பம் வரையிலும்செல்ல அனுமதி கொடுக்கும போது அக்கடவுளையே வழிபடும் சுயமதஸ்தர்களான தாழ்ந்த வகுப்பினர் என்ற இகழப்படுவோர் ஏன் அது வரையும் கூட செல்லலாகாதோ காரணம் கூற முடியவில்லை. எல்லாருக்கும் ஈசன் பரம பிதாவாக இருக்கும் போது இவ்விஷயத்துக்குக் காரணம் என்ன தான் சொல்ல முடியும். வெகு ஈனஸ்திதியில் அருவருக்கத்தக்க செயல்களை கைக்கொண்டிருந்த காலத்தில் அன்னோர்களை விலக்கி வைத்திருக்கலாம். ஆனால் காலம் மாறி அன்னார்கள் நாகரிகத்திலும் வாழ்க்கையிலும் உயர்ந்திருக்கும் காலத்திலும் கூட அன்னார்களை விலக்குவது அடாத காரியம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினானே"

என்ற சூத்திர விதிப்படி தற்காலத்துக்கேற்றபடி பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்வது நமது தர்மம்.

மேற் சொல்லிய விஷயங்கள், சைவக் கோயில்களைவிட வைஷ்ணவக் கோயில்களில் நெருக்கடி குறைவு எனலாம். வைஷ்ணவக் கோயில்களில் பிராமணரல்லாதாரைப் பிராமணரைப்போல் அர்த்த மண்டபம் வரைக்கும் விடுவார்கள். மேல் வகுப்புக்களிலும் கூட சைவக்கோயில்களில் இவ்வித்தியாசம் என்னத்துக்கோ? சுத்த தமிழர்களான ஆதிசைவர்களும் இந்த விதக்கோட்பாட்டை ஏன் அநுசரித்தார்களோ தெரியவில்லை. இனிமேலாவது நமது சமயதத்துவம் விருத்தியாகும்படி எல்லாருக்கும் பொதுவான சமயங்களில் ஏற்றத்தாழ்ச்சி வாரொட்டாமல் தடுப்பது தான் தகுந்த வழியாகும்.

# “கற்பும் சித்திரபுத்திரனும்”

## ஓர் மறுப்பு

கோவிற்பட்டி ஸ்ரீமான் P R பரமசிவ முதலியார் எழுதுவது.

சென்ற 8—1—28 ஞாயிறன்று வெளிவந்த அவையஞ்சா மாற்றம் உரைத்திடும் நம்குடியரசில் கற்புஎன்னும் பொருள்பற்றி ஒருகட்டுரை வரைந்துள்ளசித்திரபுத்திரனார் அவர்கள் திருவள்ளுவ தேவரையும் சமத்துவக் கொள்கை யற்றவர் எனக்கருதி சில மொழிகள்தொடுத்திருக்கின்றார்கள். அன்னார் கூற்றுப்படி அவர்க்குச் சற்றுமயக்கம் தந்த வள்ளுவர் நிலை எனையற்று மயக்கம் தருமாறில்லென நிலைநாட்டவே இதுஎழுதத் துணிகின்றோம்

நம் சித்திரபுத்திரனார் வள்ளுவரது குறளின் 9—ம் 91—ம் அதிகாரங்களைப் படித்துவிட்டு ‘அவ்வதிகாரங்கள் குற்றமற்றவை என்பதாக யார் எவ்வளவு தூரம் வாதிப்பதாலும் கடைசியாகத் திருவள்ளுவர் ஒரு ஆணாயில்லாமல் பெண்ணாயிருந்து இக்குறள் எழுதியிருப்பாராயின் இம்மாதிரிக் கருத்துக்களைக் காட்டியிருப்பாரா’ என்று கேட்கிறார் அவர் கருத்துப்படி. பெண்ணாகஇருந்தால் அக்கருத்துக்களை அவ்வள்ளுவர் கூறியிருக்கமாட்டார் எனவே கொண்டாலும் அதுபற்றி அவ்வதிகாரங்களில் காணப்படும் கருத்துகள் நெறிமுறையாகா எனல் முடியுமோ? தந்நலங்கொண்ட ஒரு கூட்டத்தார் ஏற்றுக்கொள்ளவில்லையானால் நீதியானது அநீதியாகுமோ? நிற்க

தமிழ்நாட்டில் வாழ்ந்த வாழுகின்ற பெண்ணரசிகளும் அக்கருத்துக்களை ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள் என்பது வெள்ளிடைமலையாம். சமத்துவக்கொள்கையொடு வெளிப்பட்ட சித்திரபுத்திரனார் ‘பலதலைமுறைப் பழக்கத்தால் பெண்மணிகள் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர்; அன்னார் ஏற்றுக்கொள்வது தாழ்த்தப்பட்டோர் தமது நிலையை யறியாது தாம் தீட்டுடையர் என்று விலக்கிக்கொள்ளத்தாமே முந்துதல் போல்வதோர் வெள்ளறிவுடைய செய்கையாம்’ என்கின்றனர்! என்னே இவர்தம் அறிவு; தாழ்த்தப்பட்டாருக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் கிடைக்க வொட்டாமல் செய்துவிட்டமையால் அன்னார் அறியாமையுடையர் என்பது பொருந்தும்.

பலதலைமுறைகளாக— ஏன், உலகந்தோன்றின்து முதல் பெண்மக்கள் வெள்ளறிவுடையவர் என அஞ்சாது கூற முற்பட்ட சித்திரபுத்திரனார் அன்னார் அறிவுவளர்ச்சிக்கேற்பட்டிருந்த தடைகளை ஆராய்ந்து வெளிப்படுத்தி பெண்கள் வெள்ளறிவுடையர் என நிலைநாட்டின் அவர்கூற்று வலியுடைத்தாம். இன்றேல் பரிந்துபேசுபவர்போல் எமது தாய்மார்களைப் பழித்து தமது வெள்ளறிவைக் காட்டினார் என்க.

நம் தமிழ் நாட்டிலோ நந்தலிலா நூல் பல நயம்பட வழங்கிய ஔவையார், அதிவீர ராம பாண்டியர்குச் சாற்றக்கவி வழங்கும் பேரறிவு படைத்த மதன லீலையார் முதலிய அறிவுடைப் பெண்ணரசிகள் வாழ்ந்ததாகக் காண்கின்றோம். அவர்களாவது சித்திர புத்திரனார் கருத்தை வெளிப்படுத்தினார்களில்லை. அம்மட்டுமின்றி நம் திருவள்ளுவப் பெருந்தகையாரது கருத்துக்களையே பறை சாற்றுகின்றனர். எம்மனோர்க்கு நீதி புகட்ட எண்ணிய ஔவையார், பெண்மக்களது மேன்மை—தாய்மையால் (மக்களைச் சுமந்து பெற்றுப் பேணி வளர்க்கும் பெருந்தகைமையால்) ஏற்பட்ட மேன்மை தோன்ற ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ எனப் பெண்மகளை முற்கிளந்து ஓதுகின்றார். அப்பெற்றியார் ‘தையல் சொற் கேளேல்’ என ஓர் நல்லுரைதந்து வள்ளுவரது ‘பெண்வழிச்சேறல்’ என்னும்91-ம் அதிகாரத்தை அரண் செய்கின்றனர். இன்னும் ‘பேதைமை என்பது மாதர்க் கணிகலம்’ என ஓர் கட்டுரை கூறியிருப்பதையும் காண்க. இவர் பெண்பாலாக இருந்து இவ்வாறு கூறுகின்றமையால் ஆணாயிருந்த ஒரு தன்மையால் அவ்வதிகாரங்களை வள்ளுவர் கூறினர் என்றல் பொருந்தாமை புலனாகும்.

இனி ஆண்கள் மூர்க்கத் தனத்தால் பெண் மக்களை வலிந்து அடிமையாக்கினர் என்று கருதும் சித்திர புத்திரனார் மேற்கண்ட நல்லுரைகளை யாமெல்லாம் போற்றும் செந்தமிழ் மூதாட்டி அடிமைப் புத்தியால் கூறினர் என்றே சொல்லத் துணிவர் போலும். இன்றேல் அவ்வாக்கியங்களுக்கு ஏற்ற சமாதானம் கூறல் அவர்கடனாம்.

எம் தமிழ்ச் சான்றோர் பலரும—சிறப்பாக திருவள்ளுவரும், ஔவையாரும் சமத்துவக் கொள்கை யற்றவரோ எனின்—அன்று’ அக்கொள்கை உடையவரே என அதை கூவி நிலை நாட்டுதும்.

தமிழ் நாட்டுத் தனிப் பெரியாராம் திருவள்ளுவர் ஒரு குலத்துக் கொருநீதி, ஒரு பாலுக் கொருநீதியாக யாதொரு நியதியின்றிக் கூறும் திறத்தினர் அல்லர் என்பது எந்நிலத்துச் சான்றோர்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. ஆகலினன்றோ திருக்குறள் உலகில் சிறந்து விளங்கும் பல மொழிகளிலும் பெயர்த்தெழுதப்பட்டுப் போற்றப்படுகின்றது. ஆனால் ‘கற்கொண்டான்’ என்றும் ‘கொழுநற் றொழுதெழுவாள்’ என்றும் கூறி ‘பெண்கொள்ளப்படுவதொரு பொருளொன்றும், அவளே தன் கொழுநனைத் தொழவேண்டியவள் என்றும் யாவரும் தெளியத் தம் கொள்கை வெளியிட்ட நிலையிட்ட வள்ளுவர் ஆண்மகனை யாண்டும் அவ்வாறு கூறிலர். ஆகலான் அவர்பால் சமத்துவக் கொள்கை இன்றெனல் ஏற்காதோ எனின், ஏற்காது. சித்திர புத்திரனாரும் தமது மயக்கத்தால் இவ்வாறே கொண்டு பழித்திட்டார். அன்னார் கருத்து மயக்கத்தால் ஏற்பட்டது என்பதைச் சித்திர புத்திரனார் தாமே ஒப்புக்கொண்டிருந்தாலும், அது போலியாகின்றவாறு யாமும் சிறிது காட்டுதும்.

நாம் முதற்கண் சமத்துவம் என்றால் என்னவென்று சிந்தித்துத் தெளிதல் வேண்டும், அது யாதொரு மாறுபாடின்றி ஒரே நிலையில் நிற்றல் எனக் கொள்வர் சிலர். அவர் யாதொரு மாறுபாடில்லாமல் ஒரே நிலையிலுள்ள பொருள் இரண்டு யாண்டு நிலவுகின்றதென ஆராயின் அத்தன்மையுடைய பொருள்கள் நிலவுலகில் இல்லையெனத் தேர்வர். ஆகலின் அவர்கொண்ட சமத்துவம் உலகிலில்லை. இனி யாவர்க்கும் ஒரே படித்தான விதி விலக்குகள் அமைப்பதே சமத்துவம் என்பர் சிலர். அவர்களை, அறிவு வளரப்பெறாத சிறுவர்க்கும், அது முற்றும் வளர்ச்சிபெற்ற முதியோர்க்கும் விதி, விலக்கு ஒரே படித்தாக அமைக்கலாமா எனக் கேட்கின்றோம். ஆயின் பிறனது உடைமையை எடுத்த ஒருவனைச் சிறையிலடைக்க என்னும் விதிபற்றி, விளையாட்டுச் சிறுவன் அயலான் பந்து ஒன்றை விளையாட எடுத்து வந்துவிட்டான் என்றால், அவனைச் சிறைபுகுத்த விரும்புவாரோ? இன்னும் ஒருவனை கன்னத்தில் மற்றவன் புடைத்தால், அவனைக்கட்டிவைத்தடிக்க என்னும் ஆணைபற்றி, மூன்று வயதுடைய மகன் தன் தந்தையொடு கொஞ்சிடுங்கால் தந்தையின் கன்னத்தில் கய்புகொண்டு புடைத்துவிடின், இவர் அப்பாலனைக் கட்டிவைத்தடிக்க முற்படுவரோ? இவர் வாதத்தின் பொருட்டு முற்பட்டாலும் அத்தந்தை சம்மதிப்பாரோ எனச் சிந்திக்க. மேலும் உணவு, உடை முதலியவற்றிலும் விதி, விலக்கு ஒரே படித்தாக இருத்தல் முடியுமா என்பதையும் ஆராய்க. ஆகவே அறிவு, உள்ளக்கிடக்கை, உடல் நிலை முதலியவற்றிற்கேற்ப விதி, விலக்குகள் மாறுபடுதல் இன்றியமையாததாயின் இவர் கருத்தும் நிலைபெறுமாறில்லை.

ஆனால் சமத்துவம் என்றால் என்னவெனில் கூறுதும். அது, உயிர்கள்யாவும் தமதம் உரிமைகளையும், தேவைகளையும் பிறர் தடையின்றியும் பிறர்க் கிடையூறின்றியும் பெறுவதும், ஒரு உயிர் மற்றோர் உயிர்க்கு உதவியாக வாழ்தலுமாம். ஆகவே பெண்மகள் தனதுரிமையையும், தேவையையும் ஆண் மகன் தடையில்லாமலும், அவனுக்கு

இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

## பாரிசாதப் பரிமளம்

## “மறைகள்”

மதுரை திரு. வீ. மு. பொன்னையா எழுதியது.

பாரதப் பெருநாட்டில் வடநாட்டார் (ஆரியர்) “மறைகள்” என்பன இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு என்பன அறிஞர் அறிந்த தொன்று. அவற்றை வடநூலார் “வேதங்கள்” எனக்கூறுவர். அவை புராதன ஞான்று வடமொழியில் ஆக்கப்பட்டன. இற்றைப்போழ்து அவை வேறு சில அந்நிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாய்த் தெரிய வருகிறது. இன்றுகாறும் அவற்றைநங்கன்னித் தமிழ் மொழியிற் மொழி பெயர்க்கவில்லை.

அம்மறைகள் எற்றுக்கு ஆக்கப்பட்டன? அவை கூறுவன என்னை? அவை பொதுவாய் உலகுக்கும், சிறப்பாய்ப் பாரத கண்டத்திற்கும், முக்கியமாய்த் தென்னாட்டுக்கும் இன்றியமையாது வேண்டற்பாலனவா? வேண்டுமேல், உலகிலுள்ள சகல மொழிகளிலும் முக்கியமாய்த் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்து அனைவரும் அறிந்து இன்புறும் வண்ணம் செய்யாதிருப்பது ஏன்? வேண்டாமேல், அவற்றை இன்னும் ஒழிக்காதிருப்பதேனோ? இன்னோரன்ன பொருள் குறித்து ஈண்டு ஆராய வேண்டுவது அவசியமும், அவசரமுமாகும்.

முதலில் மறைகளை யாத்தோர் எவர்? என்பதை நோக்குவோம். “மறைகள் அநாதி; எவராலும் ஆக்கப்பெறாதவை” எனச் செப்புகிறார் ஒரு சாரார். “இறைவனால் அருளியன மறைகள்” என்று அறைகிறார் பிறிதொரு சாரார் “பண்டைக்காலத்து வதிந்த பெரியார் பலர், தத்தம் நடைமுறை கண்டு தொகுத்தவை மறைகள்” எனச்சாற்றுகிறார் மற்றொரு சாரார். இன்னும் பலவாறு கழறுவாருமுளர்.

‘அவை அநாதி; எவராலும் ஆக்கப் பெறாதனவாய் மிளிர்பவை’ என்பதை ஆராய்வோம். மன்பதையிலுள்ள எந்நூலை எடுத்துப் பார்ப்பினும் அந்நூல் மனிதராலேயே ஆக்கப்பட்டதாயிருப்பதாகவே காணலாம். நம நாட்டிலுள்ள மறைகள் மட்டும் அநாதியாய் மிளிர்பவை எனச் செப்புவது உண்மைக்கும், புத்திக்கும் மாறுபட்ட கூற்றேயாகும். எவர் உதவியுமின்றி வந்தவை என்ற இவ்வோர் கொள்கை, அறியாமை—மூட நம்பிக்கையாயிருத்தல் வேண்டும். அல்லது சுயநலச் சூழ்ச்சியாயிருத்தல் வேண்டும் என்பது எனதபிப்பிராயமாகும். ‘இறைவனால் அருளப்பெற்றவை’ என்பதும் அத்தன்மையாகவேயிருத்தல் வேண்டும். ‘அற்றைப்போது வதிந்த அறிஞர் பலர் தத்தம் நடைமுறை கண்டு தொகுத்தவை மறைகள்’ என்பதை ஒருவாறு ஏற்க யான் ஒருப்படுவேன். அப்பெரியார் எவராயிருக்கலாம் என ஆராய்வது முக்கியமாகும்.

“மறைகள்” என்பது தமிழ் மொழி என்பதை யான் கூறவேண்டுவதின்று. அஃது தமிழரால் அவற்றிற்குக் கொடுக்கப் பெற்ற பெயர். “மறம்” என்பதினின்று “மறை” என்ற பெயர் வந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. “அறம்” என்பதின் எதிர் மறை “மறம்” என்பது கவனிக்கத் தக்கது. அறம் என்றால் நன்மை; மறம் என்றால் கொடுமை எனவே “மறங்களைத் தம்முட்கொண்டு மறைகள் மிளிர்வதை அறிந்து தமிழர், “மறைகள்” என்ற நாமத்தை ஈந்திருக்கலாம். ஆரியருக்கு “மறையோர்” என்ற பெயரிருப்பதும் எனது கூற்றை மெய்ப்பிக்கத்தக்க சான்றாகும். மறைகளை ஆக்கியவர் மறையோர் என்ற பிராமணராகவேயிருத்தல் வேண்டும். “வேதப்பிராமணர்” என்ற பெயரும் ஈண்டு நோக்கற்பாற்று. ஆகவே, மறைகள் என்பன ஆரியருடைத்து என்பது ஒருதலை. மறைகளை வரைந்தோர் எவர் என்னின் அவர் பிராமணரே என்பதைச் சுருக்கமாய்க் கூறி மேற்செல்வல்.

மறைகள் எற்றுக்கு ஆக்கப்பட்டன? என்பதை இனி ஆராய்வோம். மக்களின் அற ஆக்கத்திற்கும், மற நீக்கத்திற்கும் துணைபுரிவான் வேண்டி அவை ஆக்கப்பட்டனவாய்க் கூறப்படுகிறது. ஆரியரால் புனையப்பட்ட எந்நூலும் மக்கள் வாழ்வுக்கு இதஞ் செய்வதாய்த் தெரியவில்லை என்பதை நடுநிலை நின்று ஆராய்வோர் தெரியக்கிடக்கின்றது. உதாரணமாக மனுநூலை எடுத்துக்கொள்ளினும் எளியேன் கூற்று வலியுறுத்தக் காட்டும். ஆரியர் வழக்கே வேறு; தமிழர் வழக்கே வேறு. ஆரியர் பல பெண்களை மணப்பவர்; தமிழர் தம்வாணாள் முடிவுவரை ஒரே பெண்ணுடன் வாழ்க்கை நடாத்துபவர். ஆகவே, ஆரியரால் ஆக்கப் பெற்ற மறைகள் தமிழருக்கு இதஞ்செய்யுமா? அதஞ்செய்யுமா? என்பது கவனிக்கற்பாற்று. ஆரியர் வாழ்வு முறைக்கே வடமறைகள் ஆரியருக்கு ஆக்கப்பெற்றன என்பது எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மையாகும்.

அவை கூறுவனயாவை? என்பதைப் பார்ப்போம். அவை இதுகாறும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டில என்பதை முன்னரே இயம்பியுள்ளேன். யான் வடமொழி பயின்றவனல்லன், மறைகள் பயின்றவர்களைக் கொண்டு கூறக்கேட்டுள்ளேன். அவை ஒழுக்க நெறியையே குறிக்கொண்டு நிற்பதாய்ச் சாற்றினர். வட மொழிபயின்ற தமிழறிஞர் சிலர் பலவாறு பகன்றனர். எஃது உண்மை என்பது இனிது தெரியவில்லை. எனினும், அவை ஒழுக்க நெறியைப் புகலுவதாகவே கொண்டு ஆராய்வது தவறாகாது என மதிக்கிறேன்.

அறிவாற் சிறந்த போறிஞரில் திருவள்ளுவனாரின் திருக்குறளை யறியாதார் எவருண்டு? பாரிலுள்ள பல்வேறு மொழிகளிலும் திருக்குறள் அருமபேறு பெற்றிருப்பதைத் அறியாதார் எவர்? வையமே வியந்து போற்றும் பொய்யா மொழி (குறள்) எதைப் போதிக்கிறது என்பது பற்றி அறிஞர்க்கு எதுவும் இயம்பமுந்துவேனல்லன். இஃது உண்டு; இஃது இல்லை, என்னும் நியதியின்றி எல்லாவற்றையும் தன்னுட் தாங்கி மிளிர்கிறது திருக்குறள்’ எனச் செப்பும் வண்ணமன்றோ திருக்குறள் அமைந்திருக்கிறது. திருக்குறள் உலகிடையுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, எல்லாராலும் புகழ்ந்து போற்றப்படும் பேறு பெற்றதின் காரணம் என்னை? அது பெரிதும் ஒழுக்க நெறி குறித்தே இருப்பதாலன்றோ! மன்பதைக்கே திருக்குறள் ‘சொந்தம்’ பொது எனச்சொல்லப்படுகிறது. எனினும் நூல் எவருடையது? தமிழருடையது என்று யான் நுவல்வது அநாவசியம் “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ் நாடு” என்ற பாரதியார் பாடல் ஈண்டு நினைவுக்கு வருகிறது.

அறிஞர் அனைவராலும் தமிழ் மறை எனச் சிறந்து போற்றப்படும் திருக்குறளிலில்லாத ஒழுக்க நெறியோ பிறவோ வட மறைகளில இருக்குமோ என்பதை அன்பர்கள் உற்றுணர்வாராக. நல்லன கொள்ளலில் யான் வேற்றுமை கொள்பவனல்லன். ஆரியர் சூட்சிக்கே நாயகம் போன்றாகலான் அவரால் யாக்கப்பெற்ற மறைகளில் பல சூழ்ச்சிகளிருக்கலாம் என்பதே எனது அபிப்பிராயமாகும். தமிழர் நூல்கள் பெரும்பான்மையும் மெய் வரலாறுகள் கூறுவன. வட நாட்டார் (ஆரியர்) நூல்கள் பெரும்பான்மை பொய் வரலாறுகள் குறிப்பன என்பதை நுனுகி ஆராய்ந்தோர் எல்லாரும் கூறாது போகார். தமிழர் கொள்கைகள் உலகுக்கும் பிறவற்றிற்கும் இதஞ் செய்வனவாகும். ஆரியர் கொள்கைகளோ பல கொடுமைகளையும் சுய நலத்தையும் பிற மதங்களையும் கொண்டு நிகழ்பவையாகும். உதாரணமாக இதிகாசங்கள் எனக்கூறப்படும் ராமாயணம் மகா பாரதம் என்ற நூல்களை எடுத்து ஆராய்ந்தாலேயே உண்மை புலனாகும். ராமாயணம் என்ற நூலில் பல ஊழல்களையும் உண்மைக்கு மாறான நடத்தைகளையும் பார்க்கலாம். மஹாபாரதம் என்ற நூலில் ஒரு பெண்ணை ஐவர் அனுபவிக்கும் மிருகச் செயலையும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் நேர் நோக்குக்கும் ஒத்து வாராதபல அண்டப்புளுகுகளையும் கொடுமைகளையும் பரக்கக் காணக்கிடக்கின்றது. மகாபாரதம் ராமாயணம் என்ற நூல்களைப் பற்றித் தனித்தனியாக எழுத எண்ணியுள்ளமையால் அவற்றைக் குறித்து ஈண்டு விவரித்து கூறாமற் செல்வதற்கு அன்பர்கள் மனம் பொறுப்பாராக. ஆரியர் ஒழுக்க நெறிகள் இத்தகையன என்பவற்றை எடுத்துக் காட்ட இவற்றை இங்கு குறிப்பிட நேர்ந்தது. ஆகவே மேற்கண்ட நூல்களில் திகழும் ஒழுக்க நெறிகளே வட மறைகளிலும் மிளிரும் என்பதை விளக்கவும் வேண்டுங்கொல்? எனவே ஆரியர் மறைகளில் இருப்பதாய்க் கூறப்படும ஒழுக்க நெறி பொதுவாய் உலகத்திற்கும முக்கியமாய்த் தென்னாட்டார்க்கும்வேண்டற்பாலவையா என்பதைச்சகோதரசகோதரிகளே அறிந்து முடிவு கூறுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதன் தொடர்ச்சி 14 பக்கம் பார்க்க

## அவசியமெது?

### சமத்துவமா? சுயராஜ்யமா?

எங்கு பார்த்தாலும் சுயராஜ்யம், சுயராஜ்யம் என்ற பேரே பேரொலியாயிருக்கின்றது. சுயராஜ்யம் என்பதென்ன வெனச் சரியாய் அறியாதாருங்கூட சுயராஜ்யம் வேண்டும், வேண்டும் என்கின்றார்கள். சுயராஜ்யம் கிடைத்தால் குற்றவாளிகள் தண்டிக்கப் படமாட்டார்கள். உழைத்துச் சாப்பிடவேண்டுமென்ற சிரமம் பறந்து விடும் என்கிற நகையாடக் கூடிய கருத்துடன் பேசுகிறார்கள். நம் நாட்டை நாமே ஆள்வது நமக்குப் பெருமைதான். கௌரவம்தான், ஆனால் அப்படியாளக்கூடிய நிலைமையில் இந்தியர் இன்றிருந்து வருகின்றார்களா? ஐரோப்பியரிடம் சுயாதீனங் கேட்கிற கூட்டத்தார் இருக்கின்றார்களா? வாசகர்களே! தாழ்ந்த வகுப்பாரென்று அநியாயமாய் அக்கிரமமாய்க் கருதப்படுகிற நமது சகோதரர் இன்றனுபவித்து வருகிற சுயாதீனத்திற்கும், சமத்துவத்திற்கும் ஆங்கிலேய அரசாட்சியும் கிறிஸ்து மதமுமே காரணமென்பதை யெவர் மறுக்க முடியும்? வாசகரே இப்படிச் சொல்வதால் தக்க காலத்தில் நாம் சுயராஜ்யம் பெறக்கூடாதென்றாவது, இந்துக்கள் எல்லாரும் கட்டாயமாய் கிறிஸ்து மதத்தை யநுசரிக்க வேண்டுமென்றாவது சொல்ல வரவில்லை. ஆனால் உண்மையை மறந்தவர்களாக நாம் நடந்து கொண்டு போகும் போது உண்மையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. நம்மில் ஒருவகுப்பார் நம்மைவிட பிறப்பிலேயே உயர்ந்தவர்களாக எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் அவர்கள் கிருகங்களைத் தொடுவதற்கும் அபாத்திரவான்களென்றெண்ணி மமதை கொண்டிருக்கின்றார்கள். கல், மண் சுண்ணும்பு இவைகளால் செய்யப்பட்ட கட்டிடங்களில் பிரவேசிப்பதே கூடாதென்றால் அவர்கள் தேகத்தைத் தானும் தொட நாம் அருகரெனக்கருதுவாரா? அவர்களை யழைக்கும் போது 'சாமி' என்றழைக்க விரும்புகிறார்கள். இவர்களே இந்துமத வேத நூல்களைத் தாங்கள் பிரையாசையில்லாமல் வயிறு வளர்க்க வேண்டிய வழியில் எழுதிவைத்து விட்டார்கள். சுயராஜ்யப் போரில் முன்னணியில் முனைந்து நிற்குமிவர்கள் தங்கள் சகோதரருக்குக் கொடுக்கும் சமத்துவ உரிமை எவ்வளவு அழகாயிருக்கின்றது!

நாட்டிலே சமத்துவமில்லாமல் சுயராஜ்யம் கிடைத்தென்ன பலன்? எல்லா வகுப்பினரையும் ஒரே விதமாய் ஆளும் ஆங்கிலேய அரசின் கீழேயே இக்கோலமானால் ஆசாமிகள் கையில் ஆட்சி அகப்படுமானால் நமது நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா? இந்தியாவின் பெரிய துரதிஷ்டம் இந்தியரின் இரட்சகரெனப்படும் மகாத்மா காந்தி தானும் வர்ணாச்சிரம "அ" தர்மம் இருந்தே தீரவேண்டுமென்கின்றார். இத்தீய பாகுபாட்டிற்கு "தர்மம்" என்று பேர் கொடுத்தழைப்பதை நாமென்சொல்வோம். நம்மை அவ்வளவு அறிவிலிகளாக மதித்திருக்கின்றார்கள். இத்தனை ஊழல்கள் நம் மத்தியிலிருக்க இந்தியரை யடிமைகளாக்கி அதனால் வயிறு வளர்க்கும் வகுப்பாரை யின்னம் அடக்காமலிருக்க அப்பகுதியாரே தேசியத் தலைவர்களாயுமிருக்குமிச் சமயம் சுயராஜ்யம் கேட்கின்றோம். பொதுஜனங்களிதை யுணராமலா இருக்கிறார்கள் எனக் கேட்பின் இந்தியாவை யிக்கதிக்குள்ளாக்கினது ஆங்கிலேயரல்ல பிராமணரே. இவர்கள் நம்மை யின்னம் விட்டு விலக வில்லை. இக்காலத்தில் நமது மனதைக் கொள்ளை கொள்ள பத்திரிகைதான் ஏற்றவை யெனத் தெரிந்து நாட்டுக்கு நன்மை செய்வதைப் போல பல பத்திரிகைகளையே நம்மில் அநேகர் வாசிக்கும் படி வைத்துவிட்டார்கள். ஒருவனுடைய அபிப்பிராயம் அவன் நாடோறும் வாசிக்கிற பத்திரிகையின் அபிப்பிராயத்துக் கொத்து மாறிவிடுவது இயற்கை. அப்படியே நாமறியாமலே நமது அபிப்பிராயங்கள் பிராமண அபிப்பிராயமாக மாறிவிடுகின்றது. அப்படியானால் பிராமணியத்தை நம் மதத்திலிருந்து தொலைப்பதற்கு பிராமணரால் நடத்தப் பெறும் பத்திரிகைகள் பகிஷ்கரிக்கப்படவேண்டுவதவசியம் பிராமணர் விஷயத்தில் நாம் சமத்துவம் கேட்பது எவ்வளவு அவசியமோ அப்படியே நமக்குத் தாழ்ந்தவர்களாய் அநியாயமாய் கிரமயீனமாய் எண்ணப்பட்டு வரும் சகோதரருக்கு நாம் சமத்துவம் அளிக்க வேண்டியதும் அவ்வளவு அவசியமென்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. பிராமணர் நம்மை விட மேலென்று சொல்லிக்கொள்வது எப்படி அக்கிரமமோ அப்படியே நாமும் இன்னொரு வகுப்பாரைவிட மேலென்று சொல்லிக்கொள்வதும் அக்கிரமந்தான். பிராமணர் நம்மை விடமேலென்று சொல்லிக்கொள்வதும் அக்கிரமந்தான். பிராமணர் நம்மை விட மேலென்று சொல்வதைக் கண்டிருக்கிற நாம் நமக்குக் கீழ்ப்பட்டவர்களாகக் கருதப்படுபவர்கட்கும் பூரண சமத்துவம் உடனே யளிக்கவேண்டும். இந்தியாவின் மேல் உண்மையான அன்புடையவர்கள் சுயராஜ்யத்துக்காகவல்ல: சமத்துவம் நிலவவே பாடுபடுவர். சமத்துவம் ஏற்படா முன்னம் பிராமணீயம் ஒழியாமுன்னம் சுயராஜ்யம் அடைவோமானால் இந்திய மக்களுக்குப் பிராமணபத்தாய் முடியும்.

நுவரேலியா }
சிலோன். }

ஜே. ஏ. லேன்.

---

**சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.**

**சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள்.**

---

## மக்களும் மதமும்.

உலக சரித்திரத்தை மிக்க கவனத்துடன் உற்றுநோக்கும்பொழுது, நாளுக்கு நாள் முதிர்ச்சியடைந்துகொண்டே வரும் மனித அறிவின் பயனாய் மானிடர்கள் வாழ்க்கைக்குரிய சாதனங்களை நிர்மாணித்துக்கொள்வதிலும் சமூகாபிவிர்த்திக்கான ராஜரீகம், வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் அளவிடற்கரிதான இன்னும் பிரமிக்கத் தக்கதான முற்போக்கையெல்லாம் அடைந்துள்ளார்கள் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

அப்படிப்பட்ட அறிவின் முதிர்ச்சியெல்லாம் பெரிதும் தத்துவ சாஸ்திரம், தாவர சாஸ்திரம், பூமி சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலிய உலக இயற்கைகளை அறிவதிலேயே செலவழிக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் பாரமார்த்திகத்துக்கான ஆத்மார்த்த முன்னேற்றத்தை அடைவதற்கான வழியில் அந்த அறிவின் முதிர்ச்சி சிறிதும் உபயோகிக்கப் படவில்லை என்பதை நாம் மனமார ஒத்துக்கொள்ள வேண்டியதாகவே இருக்கின்றது. ஏனெனில் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்து விளங்கக் கூடியவர்களும் லௌகிக வாழ்க்கைக்காக எத்தனை அரிய சட்டங்களை இயற்ற வல்லவராயினும் சரி, நுட்பமான கருவிகளைக் கண்டுபிடிக்கும் கூர்மையான புத்தியுடையோராயினும் சரி, மதத்தின் பேரால் எப்படிப்பட்ட அருசை நிரம்பிய சித்தாந்தங்களையும், மூடக்கொள்கை நிரம்பிய குருட்டு நம்பிக்கைகளையெல்லாமஅப்படியேவிழுங்கிவிடுகின்றார்கள்.

துர் அதிர்ஷ்ட வசத்துக்குரிய இப்படிப்பட்ட பாமரத் தன்மையை மக்கள் அடைந்ததற்கு அவர்கள்பால் காணப்படும் அடியிற்காணும் குணங்களே முற்றிலும் காரணமாய்க் காணப்படுகின்றன.

(1) மனிதனுக்காக மதம் ஏற்பட்டிருக்கிறதென்பதை உணராமல் மதத்துக்காக மக்கள் பிறந்திருப்பதாக நினைப்பது (2) மத விஷயங்களை ஆராயப் போதிய அறிவு நமக்கில்லை என்று நினைப்பது (3) மத விஷயத்தில் அவநம்பிக்கைப் படுவது கடுங்குற்றத்துக்கு ஆளாக்கிவிடுமென்று நினைப்பது (4) நமது முன்னோர்கள் அறிவற்றவர்களாகவா இருந்தார்களென்று நினைப்பது (5) வெறுக்கத்தக்கதும் அவிவேகமானதுமான காரியங்களுக்கு ஏதோ நம்மால் அறியக்கூடாத பரம ரகசியம் அதில் பொதிந்திருக்குமென்று நினைப்பது (6) அந்த ஆராய்ச்சியில் இறங்கினால் முடிவைக் கண்டுகொள்ள முடியாதென்று நினைப்பது (7) சரியாகவோ தவறாகவோ பிற மதங்களின் மீது கொண்டுள்ள பொறாமை ஆகிய இப்படிப்பட்ட எண்ணங்களே மக்களை அப்படிப்பட்ட மிக்கத் தாழ்வான பாதாளத்தில் ஆழ்த்தி விட்டிருக்கின்றது.

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க).

## தமிழ் சித்தர் வாக்கியங்கள்.

திராவிட மக்களை ஆரியர்கள் இழிப்படுத்தியதை ஒத்துக்கொள்ளாமல் அநேக சித்தர்கள் கண்டித்து இருக்கின்றனர். கபிலர் தம் அகவலில் ஜாதி வித்தியாசத்தை பிராமணர் நாட்டினர் என்று சொல்லி பிறப்பில் ஜாதியில்லை என்ற கருத்துடன்

தென் திசைப்புலையன் வடதிசைக் கேகி
பழுதாலோதி பார்ப்பானுவான்
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கேகி
நடைபது கொணி புலையனுவான்.

என்றார். இவர் அகவல் முழுவதையும் படித்து பார்க்கவும். சிவவாக்கியர் அடியில் வருமாறு பாடினார்.

பறைச்சியாவ தேதடா
பணத்தியாவ தேதடா
இறைச்சி தோலெலும்பினுள்
இலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ?
பணத்தி போகம் வேறதோ
பறச்சியும் பணத்தியும்.
பகுத்துபாரும் உம்முள்ளே

ஞான வெட்டியாகிய சாம்பவனார் அடியில் வருமாறு சொல்லுகிறார்.

விட்டகுறைவருமளவும் உபதேசங்கான்
மெய்யுடலுந் தளர்ந்து புவிமேலுநோக்கி
தட்டழிந்து விழும்போது வேதிலைவத்த
சாத்திரதகை அதனைப்போது மறுப்போமோ
எட்டிரண்டு மறியாதார் குருக்களாமோ
யென்னையினி பறையனென்று தள்ளப்போமே
மட்டமடுப்புங் குழல்வாலாம் பிகைப்பெண்
வங்கிஷத்திலுதித்த சாம்பவனும் நானே.

சித்தர்கள், பிராமணர் ஏற்படுத்திய ஜாதி வித்தியாசங்களுக்கும் வேதங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விரோதிகள். சித்தர்கள் ஆதிதிராவிடரை உயர்த்த முயன்றார்கள்.

உதாரணமாக குதம்பைசித்தர் சொல்லுகிறார்.

ஆண்சாதி பெண்சாதியாகுமிரு சாதி
வீண்சாதி மற்றதெல்லாம் குதம்பாய்—வீண்
பார்ப்பனர்கள் மேலென்றும்
பறையோர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன
குதம்பாய்—தீழ்ப்பா
கர்த்தன் பறையோரைப் பார்ப்
பாரைப்போலவே
தீர்ப்பான் படைத்தானோடி
குதம்பாய்—தீழ்ப்பா

பத்திரகிரியார் தமது புலம்பலில

ஆதிகபிலர் சொன்ன யாகமத்தின்
சொற்படியே
சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப
தெக்காலம்-

இன்னொரு புலம்பலில்,

சாத்திரத்தைச் சுட்டு சதுர்மறையை
பொய்யாக்கி
சூத்திரத்தைக்கண்டு சுகம் பெறுவ
தெக்காலம்.

## கார்காத்தார் வாலிபர் சங்கம்- முதலாவதாண்டு நிறைவு விழா

மேற்கண்ட சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா, 22—1—28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இங்கள் கார்காத்தார் பொதுஜனக் கூடத்தில், சாத்தூர் வக்கீல், மறைத்திருவன் டி. எஸ். கந்தசாமி முதலியார் பி. எ. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும்

அதுகாலை திருவாளர்கள் ச. அம்மையப்ப பிள்ளை, பி. சின்னத்தம்பியா பிள்ளை, வி. கந்தசாமி ஆச்சாரி, ஆர். வி. நல்லகுற்றாலம் பிள்ளை ஆகிய அறிஞர்கள் அரிய சொற்பெருக்கு நிகழ்த்துவார்கள். அன்பர்கள் யாவரும் வந்திருந்து செவிமடுத்து இன்புற்று சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

விருதுநகர், 19—1—28. } சு. மா. முத்துக்கருப்பன், வி. தி. ச. ராமசாமி, காரியதரிசிகள்.

## புதுவருஷத்திய பஞ்சாங்கம்.

(1) சிமுகா மின்னி இப்ரூஹீம் சாயபு கம்பெனியார், (2) மதருஸ் ஆண்டர்சன் வீதி காகித வியாபாரம் C. N. D சாமி கம்பெனியார், (3) ஈரோடு கிருஷ்ணு பயிண்டிங் ஆபீஸார், (4) மதருஸ் லேப்பெரி சானிடெரி என்ஜனியர் எம். கண்ணு கம்பெனியார், (5) மதருஸ் பார்க்டவுன் சோடா சாமான் வியாபாரம் ஸ்ரீ வஜ்ஜிரவேல் முதலியார், (6) மலேயா நாட்டு ஜோகூர்பாரு ஜவுளி நகை வியாபாரம் ஸ்ரீ கோவிந்தசாமி நாடார் ஆகியவர்கள் அனுப்பிய தத்தம் கம்பெனியின் 1928-ம் வருஷத்திய அழகிய காலண்டர் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

---

என்றும்,

தேவிகாலோத்திரத்திலேயே அடியிற் கண்ட பாடலில் இருக்கிறது.

"சமையசார சங்கற்பவிகற்பமு
மமையயார் தாங்குல வாசாரமான
மியையாதாரும் விடாதவில் வாழ்க்கையு
மாயார்தேவாய் விடுதலைசாமமே"

பாச்சலூர் பதிகம்.

"ஒருபனை இரண்டுபாளை ஒன்று நுங்
கொன்று கள்ளு
அறிவினிலுயர்ந்தவர்க்கு அதுவுங்கள்
இதுவுங்கள்ளே
ஒருகுலை உயர்ந்ததேனே ஒரு குலை
தாழ்ந்ததேனே
பறையனைப் பறிப்பதேனே பாச்சலூர்
கிராமத்தாரே.

இம்மாதிரியாக தமிழ் சித்தர்களும் மற்றவர்களும் ஜாதி வித்தியாசத்தை நீக்கவும் பிராமணர் ஆசாரம் வேதங்கள் இவைகளை நீக்கிவிடவும் பலவிதமாய் பாடல்கள் மூலமாயும் பிரசங்கித்து வந்தார்கள். ஆயினும் நீங்கவில்லை இந்துமதம் ஜாதியின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது. ஜாதியை நீக்கினால் மதம் கெட்டுப்போகிறதாக நினைக்கிறார்கள். ஆங்கிலேய நாகரீகமும் கல்வியும் இத்தேசத்திற்கு வந்தபிறகு எல்லோரும் கண் திறந்து கொண்டார்கள். ஆயினும் பூர்வகாலத்தைப் போல் தற்காலத்தில் மூடர்கள் இருப்பதால் நீக்கக்கூடாமல் இருக்கிறது என்று எஸ். பி. பாலன் எழுதுகிறார்.

"திராவிடன்"

## கூத்தூர் குருக்கத்தியில்பார்ப்பனீய மற்ற திருமணம்

தஞ்சை ஜில்லா தஞ்சை நாகை லைனில் கூத்தூர் ஸ்டேஷனுக்கு அடுத்த குருக்கத்தி என்னும் கிராமத்தில் சோழிய வேளாள வகுப்பைச் சேர்ந்த திருவாளர் சாமிநாத பிள்ளை அவர்களின் குமாரரான திருவாளர் பக்கிரிசாமி பிள்ளைக்கு 27—1—27 ஞாயிற்றுகிழமை காலையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. மணமகள் தமிழ்மக்கள் சுயமரியாதையை முன்னிட்டு தனது திருமணத்தில் எவ்விதத்திலும் பார்ப்பனப்புரோகிதம் கூடாது எனக்கருதி பரிசுத்தத் தமிழ் மணம் செய்யத் தீர்மானித்திருக்கின்றார். அத்திருமணத்திற்கு ஈரோடு ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும் வரும்படி அழைத்திருப்பதாலும் திரு நாயக்கரும் வருவதாக ஒரு மாதத்திற்கு முன்னதாகவே வாக்களித்திருப்பதாலும் அவசியம் வருவார்.

---


## ஓர் பெரியாரின் மரணம்.

மண்டி அ. கோவிந்த நாயக்கர்

ஈரோடு பிரபல வியாபாரியும் திருE Vராமசாமிநாயக்கரின் சிறியதகப்பனுருமான ஈரோடு மண்டி திரு அ. கோவிந்த நாயக்கர் தனது 75 வது வயதில் 2, 3 மாதம் காய்லாவாக புதன்கிழமை இரவு 11 மணிக்கு இம்மண்ணுலகை நீத்தார்.

அப்பெரியார் தக்க செல்வவந்தரும், மிக்க பரோபகாரரும், தாராள கொடையாளருமாய் இருந்ததுடன் சுமார் 10, 15 வருஷ தேவஸ்தான கமிட்டி மெம்பாரகவும் 2, 3 தடவை ஈண்டு முனிசிபல் கவுன்சிலாராகவும் இருந்து வந்தவர். அவரின் ஒரே அருமைக்குமாரரான திரு அ. கோ. ராமசாமி நாயுடு அவர்கள் தனது தகப்பனர் மரணச் சடங்குக்கு எவ்வித பார்ப்பன சம்பந்தமும் இல்லாமல் சுத்த தமிழ் முறையில் வெகு சுருக்கத்தில் தீட்டு முதல் எல்லா சடங்குகளையும் மூன்றும் நாளே முடித்து விட்டார். பழய முறைப்படி செய்திருப்பார்களானல் எவ்விதத்திலும் 500 ரூபாய்க்கு குறையாத செலவில் பார்ப்பனீய சடங்குகள் நடை பெற்றிருக்கக் கூடும். அதை நிறுத்தி மற்றவர்களுக்கும் வழி காட்டின பெருமை அவருக்கே உடையதாகும். மற்றும் தனது தகப்பனர் மரணத்தை உத்தேசித்து 1000 ஏழைகளுக்கு அன்னமளிக்கவும் சிலருக்கு ஆடை அளிக்கவும் ஏற்பாடு செய்து சமீபத்தில் நடை பெறும்.

மற்றும் அந்த சமூகத்தில் இம்மரணத்தை உத்தேசித்து மூன்றும் நாள் மொய் வாங்கி வந்த வழக்கத்தையும் நிறுத்திவிட்டார். இதை அச்சமூகப்பெரியார்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள் இனி அனேகமாய் அச்சமூகம் இந்த முறைகளையே பின்பற்றுவார்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எல்லாம் வல்ல சக்தி அச்சிறுவருக்கு சகல மேன்மையையும் உண்டாக்குவதாக.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ தைமீ 9உ

## கமீஷன் பகிஷ்கார நாடகம்.

### அகில இந்திய வேலை நிறுத்தம்.

ராயல் கமிஷன் பஹிஷ்கார நாடகமானது இதுவரையில் தீர்மான ரூபங்களாகவும் தட்டிப்பேச ஆள் இல்லாத இடங்களில் மேடைப் பேச்சாகவும் இருந்து வந்ததானது இப்போது அதாவது பிப்பரவரி மீ மூன்றாம் தேதியில் காரியத்தில் காட்டப்படப் போவதாக தெரிய வருகின்றது. அதாவது இம்மாதம் 15 தேதியில் காசியில் சர்வகக்ஷி பகிஷ்கார மகாநாடு என்பதாக ஒன்று கூடி அகில இந்திய ஹர்ட்டால் (வேலை நிறுத்தம்) செய்வது என்பதாக தீர்மானங்கள் செய்திருப்பதாய் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது. அதை அனுசரித்து நாடெங்கும் வேலை நிறுத்தங்கள் செய்வதற்கு வேண்டிய பிரசாரங்களும் ஆங்காங்கு நடத்த முயற்சிகளும் செய்யப்படுவதாய் காணப்படுகின்றது.

பகிஷ்கார விஷயமாய் ஒவ்வொரு கக்ஷிக்காரர்களும் ஒவ்வொரு தலைவர்கள் என்பவர்களும் சொல்லிவந்த விஷயங்களை மறுத்து அதில் உள்ள புரட்டுகளை வெளியாக்கியும் எத்தனையோ கட்டுரைகள் எழுதியும் சொற்பெருக்குகள் பொழிந்தும் வந்திருக்கும் இதுவரை அவற்றில் ஒன்றுக்காவது சமாதானமோ பதிலோ இல்லாமல் தங்கள் வழக்கப்படி புரட்டுகளையே பாமர மக்கள் மயங்கும்படி எழுதிக்கொண்டும் பேசிக்கொண்டும் வருகிறார்களே ஒழிய மக்கள் உண்மையை அறிய இவர்கள் ஒரு சிறிதும் கவலையெடுத்துக் கொள்ளவில்லை.

ஆனாலும் பகிஷ்காரத்திற்கு அறிகுறியாக செய்யப்போகும், வேலை நிறுத்தத்தில் என் செய்யப்போகிறார்களென்று கவனிப்போம்.

பகிஷ்கார இயக்கங்களில் சேர்ந்த மந்திரி யாராவது அன்று சர்க்கார் வேலை பார்க்காமல் இருக்கப் போகிறார்களா? சட்டசபை மெம்பர்கள் சட்டசபை நடந்தால் போகாமல் இருக்கப் போகிறார்களா? வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போகாமல் இருக்கப் போகிறார்களா? இதைப்பற்றி ஒரு தீர்மானத்தையும் காணோம். பின்னையோவென்றால் ஜட்கா வண்டிக்காரர்கள் வண்டிகட்டக் கூடாது என்பதும், வெற்றிலை பாக்கு பல சரக்குக் கடைக்காரர்கள் கடை திறக்கக் கூடாது என்பதும், பலகாரக் கடைக்காரர்கள் கடை வைக்கக் கூடாது என்பது போன்றவைகள் தான் பகிஷ்காரத்தைக் காட்ட வேலை நிறுத்தமாகப் போகின்றது. ஜட்கா வண்டிகள் நடைபெறாவிட்டால் ஜட்கா வண்டிக்காரனுக்கு நஷ்டமேயல்லாமல் தலைவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்படக் கூடும்? தலைவர்கள் அவரவர்கள் வீட்டில் உள்ள மோட்டார் வண்டிகளில் உல்லாசமாய் ஊர்கோலம் வருவது தப்பாது. தவிர வெற்றிலை பாக்குக் கடை மூடப்பட்டால் தலைவர்களுக்கு என்ன நஷ்டம் வரக்கூடும்? நாளைக்கு கடை திறக்க மாட்டார்கள் என்று சொல்லி முதல் நாளே வாங்கிக் கொண்டுபோய் வீட்டில் வைத்துக் கொள்ளுவார்களே ஒழிய அன்று முழுதும் வெற்றிலை பாக்கு பொடி முதலியவைகளை போடாமலாவது இருப்பார்களா? அதுபோலவே ஒரு சமயம் கோர்ட்டுக்குப் போகாவிட்டாலும், ஒன்று வாய்தா வாங்கிக் கொள்வார்கள் அல்லது வேறு ஒருவனை ஆஜராகச் சொல்வார்கள். ஒன்றுக்கும் முடியாவிட்டால் கக்ஷிக்காரர்கள் கேசு கெட்டுப் போகும். மற்றபடி இவர்களுக்கு அதனால் நஷ்டமென்ன ஏற்படக்கூடும் என்பதைக் கவனித்தால் வேலை நிறுத்தத்தில் இவர்களது தியாகம் விளங்காமல் போகாது.

இது தவிர கமிஷன் மெம்பர்களை மற்றவர்கள் பார்க்க விடாமல் அதாவது இளவரசர் வரவை பகிஷ்கரித்ததுபோல் சில காலிகளைவிட்டு மறியல் செய்யக்கூடும். இதனால் இப்பெரிய மனிதர்கள் அதாவது சர். தியாகராயர் வீட்டில் ஜன்னல் கதவுகளை உடைத்ததுபோலும் அவரை அடிக்க வந்ததுபோலும் உபத்திரவப் படலாம். மற்றபடி இவர்களுக்கு ஏற்படும் கஷ்டமென்ன? ஆதலால் இந்த வேலை நிறுத்தமென்பது ஏழைகளை கஷ்டப்படுத்தும் மற்றொரு கெடுதியே அல்லாமல் வேறல்ல,

அல்லாமலும் இவ்வேலை நிறுத்தம் வெற்றிபெற்று கமீஷனும் இத்தலைவர்களுக்கு வணங்கி இந்தியர்கள் யாரையாவது கமீஷனில் சேர்த்துக் கொள்ளவோ அல்லது இந்திய சுயராஜ்ஜிய நிர்ணயம் செய்ய இவர்களுக்கு பூரண அதிகாரமும் கொடுக்கவோ வசப்பட்டால் அதன் மூலம் இந்தவேலை நிறுத்தம் செய்த ஏழை மக்களுக்கு என்ன நன்மையுண்டாகும்படி இத்தலைவர்கள் திட்டம் போடக்கூடும் என்பதை யோசித்தால் இதன் புரட்டு வெளியாகாமல் போகாது.

இந்த நாட்டின் பாமர மக்களின் உண்மையான பாமரத் தன்மையை விளக்கவும் இப்பாமர மக்களின் பேரால் வயிறு பிழைக்கக் கருதியிருக்கும் அரசியல் வாழ்வுக்காரர்களின் வன் நெஞ்சத்தை விளக்கவும் இந்த பகிஷ்காரப் புரட்டு ஒன்றே போதுமானது என்பது நமது முடிவு.

இதுவரையில் பகிஷ்காரத்திற்குக் காரணம் எல்லாம் மூன்று விஷயங்கள் தான் முக்கிய தலைவர்கள் என்பவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை முன்னும் எழுதியிருக்கிறோம்.

1 இந்தியர்களை கமிஷனில் சேர்க்கவில்லை என்பது.

2 இந்தியாவின் சுதந்திரத்திரத்தை நிர்ணயிக்க இந்தியர்களுக்கு அதிகாரமேயொழிய பார்லிமெண்டுக்கு இல்லை என்பது.

3 ஆகையினால் இக்கமிஷன் நியமித்தது இந்தியாவின் சுயமரியாதைக்கு பங்கம் என்பது.

இம்மூன்றையும், கூர்ந்து பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்படக்கூடியது என்பது விளங்கும்.

தவிர இந்தியர்களில் யாரை நியமிப்பது என்பதும் பார்லிமெண்டாரால் இதுவரை இந்தியாவுக்கு நிர்ணயித்து வந்த சுதந்திரங்களை நாம் பகிஷ்கரித்தோமா அல்லது இந்த சமயத்திலாவது பகிஷ்கரிக்கத் தயாராயிருக்கின்றோமா என்பதும் முதல் இரண்டு விஷயத்துக்குத் தக்க சமாதானமாகும்?

மூன்றாவதான சுயமரியாதை விஷயம் நித்திய அரசு முறைவாழ்க்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நமக்கு சுயமரியாதை வழங்கப்பட்டு வருகின்றதா என்பதையும் பஞ்சாப்பு அட்டூழியத்தை விட கமிஷனால் நமக்கு அதிகமான சுயமரியாதை பங்கம் வந்துவிட்டதாவென்பதையும்வங்காளத்தலைவர்களை காரணமில்லாமல் சிறையில் அடைத்துவைக்கிறார்களே அதை விட இந்த கமிஷன் நியமனத்தால் அதிகமான சுயமரியாதைப் பங்கம் வந்துவிட்டதா என்பதையும் யோசித்துப்பார்த்தால் மூன்றாவதான நமது சுயமரியாதையின் தத்துவம் விளங்காமல் போகாது. அன்றியும் சமூக வாழ்க்கையில் 100க்கு 3 வீதம் உள்ள பார்ப்பனர்கள் நம்மை நித்திய வாழ்க்கையில் இகபர சாதனம் என்பவைகளில் நடத்தி வரும்—நாமும் ஏற்று நடந்து வரும் தத்துவங்களை விட இந்த கமிஷன் நியமனம் சுயமரியாதைப் பங்கமானதா என்பதை யோசித்தால் இந்த கூச்சல் யோக்கியமானதா என்பது விளங்கிவிடும். ஆதலால் சமூக முன்னேற்றத்திற்கும் உண்மையான சுயமரியாதை தத்துவத்திற்கும் அனுகூலமான இந்த சந்தர்ப்பத்தை வேறு வழியில் திருப்பிவிடுவதற்காகவும் கமிஷன் மூலமாய் நமது எதிரிகள் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடாய் செய்யும் இச்சூழ்ச்சிக்கு நமது மக்கள் இணங்கி ஏமாறக்கூடாது என்றே சொல்லுகின்றோம்.

### பகிஷ்கார தினத் தன்று தொண்டர்கள் கடமை.

வேலை நிறுத்தம் காரியத்தில் நடைபெற ஏதாவது ஏற்பாடுகள் செய்வார்களானால் உத்தியோகப் பார்ப்பனர்கள் ஒவ்வொருவரும் இந்த வேலை நிறுத்தத்திற்கு அனு

# ஆதிதிராவிட மகாநாடு.

சென்னையில் சமீபத்தில் கூடிய ஆதிதிராவிட மகாநாட்டைப்பற்றி பார்ப்பனப்பத்திரிகைகளும் அவற்றை பின்பற்றி வாழும் பார்ப்பனரல்லாத சில பத்திரிகைகளும் அம்மகாநாட்டையும் மகாநாட்டுத் தீர்மானங்களையும் நசுக்க எண்ணங்கொண்டு அதைப் பற்றி வெகு கேவலமாக எழுதியும் பேசியும் வருகின்றார்கள். இதைப்போன்ற ஒரு கொடுமையான காரியம் வேறு ஒன்று இருப்பதாகச் சொல்ல முடியாது.

ஆதிதிராவிட சகோதரர்கள் இந்தியாவின் ஜனத்தொகையில் சுமார் நாலில் ஒன்று அல்லது ஐந்தில் ஒன்று என்பதாக 6, 7 கோடி மக்கள் இருந்தாலும் அதைப்பற்றி ஒரு சிறிதும் லட்சியம் இல்லாமல் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாகக்கூட வெளியார்கள் அறிவதற்கும் இல்லாமல் சூழ்ச்சி செய்து மறைத்து வைத்து விட்டு அவர்களது சுதந்திரத்திற்காக இப்பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளான பார்ப்பனரல்லாதாரும் அவர்களது பத்திரிகைகளும் எவ்வித உதவியும் செய்யாமலிருப்பதோடு ஆதிதிராவிடர்களாக ஏதாவது முயற்சித்தாலும் அதையும் கொலை செய்யப்பார்க்கின்றார்கள். என்ன கொடுமை! என்ன கொடுமை!! அதாவது சமீபத்தில் சென்னையில் கூடிய ஆதிதிராவிட மகாநாட்டு நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் பற்றி ஒரு சிறிதும் அனுதாபம் கொள்ளாமல் அது "சர்க்கார் தாசர்கள் மகாநாடு" என்றும் "சுயநலக்காரர்கள் மகாநாடு" என்றும் 'முப்பது பேர்களே' அம்மகாநாட்டில் கூடி இருந்தார்கள் என்றும் எழுதி அதன் மதிப்பைக்கெடுத்து பொது மக்களுக்கு அதனிடம்

துவேஷமும் வெறுப்பும் வரும்படி பிரசாரங்கள் செய்து வருகின்றன.

எனவே காங்கிரசுக்கும் இந்திய அரசியல் தலைவர்கள் என்போருக்கும் ஆதிதிராவிடர்களிடம் இருக்கும் அபிமானத்திற்கும் முன்னேற்றக்கவலைக்கும் இதுதான் அடையாளம் போலும்.

காங்கிரஸ் ஏற்பட்டு 42 வருடங்களாகி, சீர்திருத்தம் ஏற்பட்டு 20 வருடங்களாகியும் ஏழு கோடி ஆதிதிராவிடர்களில் ஏதாவது ஒரு ஆதிதிராவிடர் ஸ்டேட் கவுன்சில் முதல் கிராம பஞ்சாயத்து வரையில் ஏதாவதொன்றில் பொதுப் பிரதிநிதியாய் சர்க்கார் தயவில்லாமல் உட்கார இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

இனிமேல் வரப்போகும் சீர்திருத்தங்கள் என்பதிலாவது ஸ்ரீமதி பெசண்ட் முதல் மற்றும் அநேக தலைவர்கள் என்போர்கள் ஏற்படுத்திய சுயராஜ்ய திட்டத்திலாவது ஏதாவது ஏற்பாடு செய்தார்களா என்று கேட்கின்றோம். நமது கொடுமையல் வண்ணான் இல்லாமல் நாவிதன் இல்லாமல் அழுக்கு உடைகளுடனும் வளர்ந்து கவிந்த மயிருடனும் பிசாசுகள் என்பவைகளைப்போல் திரியும் ஏழை பாவங்களுக்கு ஏதாவது ஒரு வழி காட்டினார்களா என்று கேட்கின்றோம்.

சில இடங்களில் தெருவில் நடக்கக்கூட உரிமையில்லாமலும் சில இடங்களில் மனிதன் கண்களில் தென்படக்கூட உரிமை இல்லாமலும் நரி போலவும் முயல் போலவும் வெளியில் பதுங்கித்திரிகின்றார்கள். இவற்றை நீக்க ஏதாவது ஏற்பாடு செய்தார்களா என்று கேட்கின்றோம்.

கோவில்களில் உள்ள தெய்வங்கள் என்பவைகளைப் பார்க்கவோ வணங்கவோ ஏதாவது வழி செய்தார்களா என்று கேட்கின்றோம்.

குடிக்கவோ பல் விளக்கவோ தண்ணீர் இல்லாமல் திண்டாடுகின்றார்களே. இதற்கு ஏதாவது வழி செய்திருக்கின்றார்களா என்று கேட்கின்றோம்.

அன்னிய நாட்டிலிருந்து வயிற்றுப்பிழைப்புக்காக பிச்சைக்காரர்களாய் நமது நாட்டுக்கு வந்தவர்களான ஆரியர்களின் சந்ததியார்கள், பஞ்சாங்கம் சொல்லி பிச்சை யெடுத்து புஸ்தகம் வாங்கி முனிசிபல் விளக்கு வெளிச்சத்தில் படித்து விட்டு, இந்தியாவை காட்டிக்கொடுத்து இந்தியமக்களுக்கு துரோகம் செய்து மாதம் 1-க்கு 5000, 10000 ரூபாய் வீதம் சம்பள முள்ள உத்தியோகமும் சம்பாதனையும் ஏற்படும்படியாக காங்கிரசின் மூலம் சீர்திருத்தம் சம்பாதித்துக் கொண்ட இவர்கள், இந்த ஏழை ஆதிதிராவிடர்கள் தெருவில் நடந்து மூட்டை தூக்கிப் பிழைக்கவாவது வழிசெய்தார்களா என்று கேட்கின்றோம்.

இங்கிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் சர்க்கார் தாசர்களாய் இருக்காமல் வேறு அய்யங்கார் தாசர்களாய் இருக்க முடியுமா? மற்றும் அய்யர்கள் தாசர்களாய் இருக்க முடியுமா? அவர்களது அடிமைகள் தாசர்களாய் இருக்க முடியுமா? அல்லது யார் தாசர்களாய் இருக்கவேண்டுமென்று தான் இந்த அரசியல் வாழ்வுக்காரர்கள் விரும்புகின்றார்கள்? அல்லது எந்த இயக்கத்தின் தாசர்களாய் இருக்கும்படி விரும்புகின்றார்கள்? அந்த இயக்கம் இவர்களுக்கு இது வரை செய்த நன்மை இன்னது என்றாவது சொல்லட்டும் என்று கேட்கின்றோம்.

நிற்க ஆதி திராவிடர் மகா நாடானது இந்த மாகாண ஆதி திராவிட சமூகத்திற்கு சரியான பிரதிநிதித்துவம் கொண்டதல்லவென்றும், முப்பது பெயர்களே இந்த மகா நாட்டுக்கு வந்திருந்தார்கள் என்றும், அரசியல் பிழைப்புக்காரர்கள் எழுதி அம்மகா நாட்டை கேவலப்படுத்தி இருக்கின்றார்கள். இதைவிட அயோக்கியத்தனமான காரியம் வேறொன்றும் இல்லை என்றே சொல்லலாம். இந்த மகாநாடு ஆதி திராவிடர் மகா நாடு அல்ல என்று சொல்வதற்கு இவர்களுக்கு என்ன சுதந்திரமுண்டு என்று கேட்கின்றோம். 'மித்திரன்' கூட்டத்தாரும் 'தமிழ் நாடு' பத்திரிகை கூட்டத்தாரும் ஆதி திராவிட வகுப்பைச்சேர்ந்தவர்களா? அல்லது வேறு ஆதி திராவிடர்கள்: மகாநாடு நடத்தியவர்களைவிட அதிசயமான எண்ணிக்கைப் பிரதிநிதிகள் இவர்களுக்கு எழுதினார்களா? அல்லது ஆதி திராவிட சகோதரர்களுக்குள் ஏதாவது இம்மகாநாடு விஷயத்தில் தகராறு ஏற்படாதா? அப்படிக்கில்லாமல் அந்த சமூகத்திற்கு சம்மதப்படாத ஒருவர் அது சரியான பிரதிநிதித்துவம் அல்ல என்று சொல்வது குறும்புத்தனமா அல்லவா என்றுகேட்கின்றோம். சுமார் 500 பிரதிநிதிகளுக்கு மேல் இவ்வாதித்திராவிட மகாநாட்டுக்கு வந்திருந்ததாக ஸ்ரீமான் சின்னையா தமது மறுப்பில் எழுதியிருக்கிறார் அதை இது வரை யாரும் மறுக்கவில்லை. இவர்கள் சொல்லுகிறபடியே 30 பெயர்கள் தான் என்பது உண்மையாயிருந்தாலும் இவர்கள் கூட்டங்களைவிட ஆதி திராவிடக் கூட்டம் எந்த விதத்தில் குறைவுபட்டு விட்டது? எல்லா இந்திய மிதவாதிகள் மகாநாட்டுக்கு 33 கோடி மக்களுக்கு பிரதிநிதிகளாய் வந்தவர்கள் எத்தனை பெயர் என்று கேட்கின்றோம். எல்லா இந்தியர் அல்லது சென்னை மகாண பத்திராதிபர்கள் மகாநாட்டுக்கு வந்த பெயர் வழிகள் எத்தனை பெயர்கள் என்று கேட்கின்றோம். 8 கோடி முஸ்லீம்களுக்கு பிரதிநிதிகளாக காங்கிரசுக்கு வந்த முஸ்லீம்கள் எத்தனை பெயர்கள் என்று கேட்கின்றோம். 7 கோடி தீண்டாதார் என்னப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக காங்கிரசுக்கு வந்த எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்கின்றோம். அகில இந்திய வருணாசிரம மகா நாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் எவ்வளவு என்று கேட்கின்றோம்? வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அகில இந்திய எல்லா கட்சி மகா நாடு கூட்டத்திற்கு வந்தவர்கள் எத்தனை பெயர் என்று கேட்கின்றோம்? 'தமிழ் நாடு' பத்திரிகை ஆபீசின் அறையில் அடிக்கடி கூடும் கூடும் மகாண தேசிய மகாநாட்டுக்கு வந்துகொண்டிருக்கும் பிரதிநிதிகள் எத்தனை

---

கூலமாக ஆங்காங்குள்ள பாமர மக்களை மிரட்டி வேலை நிறுத்தத்திற்கு உதவி செய்யக் கூடும் என்பதும் நமக்குத் தெரியும்.

ஆனாலும் ஆங்காங்குள்ள சுயமரியாதைத் தொண்டர்கள் இவ்வதிகாரிகளுக்குப் பயப்படாமல் ஒன்று சேர்ந்து முதல் நாளே ஒவ்வொரு கடைக்காரரிடமும், வண்டிக்காரரிடமும் போய் உண்மையைச் சொல்லி ஏமாறாமலிருக்கச் செய்ய வேண்டும். 'குடி அரசு' 'நவசக்தி' 'திராவிடன்' 'குமரன்' முதலிய பத்திரிகையிலும் இது விஷயமாய் வந்த வியாசங்களைப் பெயர்த்து துண்டு விளம்பரங்கள் அச்சிட்டு வழங்கவேண்டும். ஆங்காங்குள்ள முக்கிய தொண்டர்கள் தங்களது விலாசத்தை உடனே தெரிவித்தால் துண்டு விளம்பரங்கள் அனுப்பிகொடுக்கப்படும்.

தவிர 'திராவிடன்,' 'குடி அரசு' 'குமரன்' நவசக்தி போன்ற பத்திரிகைகளுக்குசந்தா சேர்க்க வேண்டும், பார்ப்பனப் பத்திரிகைகளையும் பார்ப்பனர்களுக்கு உள் உளவாளோ அல்லது அவர்களுக்கு பயந்து கொண்டோ பகிஷ்காரக்கூச்சலில் கலந்து கூட்டத்தில் கூப்பாடு போடும் பகிஷ்காரப் புரட்டுப் பத்திரிகைகளையும் பகிஷ்கரிக்கும் படி அறவுத்தவேண்டும்.

## திருச்சியில் சுயமரியாதைக்கு ஜே! சூத்திரப்போர்டு எடுபட்டது.

இவ்வூர் பெரியக்கடை வீதியில் பழனி அண் கோ, புத்தகசாலைக்கு அருகிலுள்ள ஒரு பார்ப்பன காபி சாப்பாடு ஓட்டலில் இவ்விடம் பிராமணாளுக்கும் சூத்திராளுக்கும் அதி விமரிசையாக சாப்பாடு போடப்படும் என்று எழுதியிருந்த விளம்பரப் பலகையை கண்ணுற்ற இவ்வூர் சுயமரியாதை தோழர்களும் புவாளூர் சுயமரியாதைச் சங்கத் தலைவருமான திருவாளர் செல்லைகணபதி செட்டியார் அவர்களும் ஷெ ஓட்டலின் சொந்தக்காரப் பார்ப்பனருக்கு பல தடவைகளில் ஷெ போர்ட்டை எடுத்துவிடும்படி சமாதனமாக சொன்னதின் பயனாக அன்னவர் ஒன்றும் பதில் பேசாமல் சூத்திராள் என்ற பதத்தை எடுத்து விட்டு இப்பொழுது இதாளுக்கு சாப்பாடு போடப்படும் என்று எழுதி வைத்து விட்டார். இனி சூத்திராள் என்ற பெயரை எங்கும் காணாதவாறு செய்வதற்கு சுயமரியாதை தோழர்கள் பாடுபடுவார்களாக சுயமரியாதை வாழ்க! பார்ப்பனராட்சி வீழ்க!! து, பிச்சையா-

மலாய் நாட்டில்

### மதுரை ராமநாதபுரம் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்- ஓர் வேண்டுகோள்-

மதுரை இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாட்டை மதுரையில் மே மாதத்தில் நடத்துவதாக இச்சங்கம் தீர்மானிக்கிறது- மதுரை இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கங்கள் ஒவ்வொன்றும் தம் தம் அபிப்பிராயத்தை பிப்பரவரி மாதம் 1ம் உ-க்குள் மதுரை பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்க காரியதரிசிக்குத் தெரியப்படுத்தவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கே- இராமசாமி, காரியதரிசி,
38/39 மணிநகரம் மதுரை.

---

பேர் என்று கேட்கின்றோம். பார்ப்பனரல்லாதாருக்குள் ஒழுங்குமுறைக்கட்சி என்று ஸ்ரீயாங்கள் டி. எ. ராமலிங்கம்செட்டியார் கே. வி. செட்டியார் முதலியோர் கூட்டின மகாநாடுகளுக்கு அவ்வப்போது வந்த பிரதிநிதிகள் எத்தனை பெயர் என்று கேட்கின்றோம். இவைகளின் பிரதிநிதித்துவங்களைப் பற்றி ஒரு சிறிதும் எண்ணிக்கைகளைக் குறிப்பிடாமல் ஆதி திராவிடர்கள் மகாநாட்டைப்பற்றி மாத்திரம் இந்தத் தலைவர்களும் தேசபக்தர்களுக்கும் எண்ணிக்கையை குறைத்து தேவலைப்படுத்தவேண்டிய கட்டாயம் என்ன வந்துவிட்டது என்பதை யோசித்துப் பார்ப்பதோடு இதிலிருந்தே ஆதி திராவிடர்கள் விஷயத்தில இத்தேச பக்தர் தேசிய பக்தர் தலைவர் முதலானவர்களின் கவலை என்ன என்பதும் ஆதி திராவிடர்களுக்கு இவர்கள் பிரதிநிதிகள் ஆவார்களா என்பதையும் பொது மக்கள் உணர்ந்து யாக்கிரதைப்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

## ஸ்ரீமான் நாயக்கரின் சுற்றுப்பிரயாணம்.

இவ்வாரம் திரு ஈ வெ ராமசாமி நாயக்கர் 16ந் தேதி காலை பொள்ளாச்சிக்கு வந்து சேர்ந்தார். அவ்வூர் வைஸ் சேர்மென் திரு நாராயணம் பிள்ளை, கவுன்சிலர்கள் திருவாளர்கள் முத்தைய கவுண்டர், ராமலிங்கம் பிள்ளை, மற்றும் பல பிரமுகர்கள் திரு நாயக்கரை வரவேற்று மேளவாத்தியங்களுடன் பொள்ளாச்சி மயிலந்சந்தையில் ஏற்பாடு செய்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கவுன்சிலர் திருவாளர் காளீஸ்திரி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தில் சுயமரியாதையும் சாயமன் கமிஷன் பகிஷ்காரமும் என்பது பற்றி ஓர் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார், ஏராளமான ஜனங்கள் வந்து கேட்டார்கள். திருவாளர் ராஜகோபால் ராவ் அவர்கள் எல்லோரும் சாயமன் கமிஷனை பகிஷ்கரிப்பதால் நாமும் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் பார்ப்பனர்கள் மீது குற்றம் சொல்லுவதைவிட அவர்கள் திருந்தத் தக்கமார்க்கம் சொல்லவேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நாயக்கர் நாம் பார்ப்பனியத்தை ஒழித்தாலொழிய திருந்தமாட்டார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் எடுத்துக்காட்டி சாயமன்கமிஷனை எல்லோரும் பகிஷ்கரிக்கின்றார்கள் என்று சொல்லுவது உண்மையல்லவென்றும், பகிஷ்கரிப்பதாய் சொல்லப்படும் சில தலைவர்கள் என்போர்களின் நாணயக்குறைவை விளக்கிக் காட்டினார்.

### கோயமுத்தூர்.

17ந் தேதி காலை கோயமுத்தூருக்கு வந்து பல பெரியாரைக்கண்டு பகிஷ்காரப் புரட்டைப்பற்றி எடுத்துச்சொல்லி பகிஷ்காரத்தில் சேராமலிருப்பதற்கு ஏற்பாடு செய்தார்

### சேலம்

18ந் தேதி பகல் சேலத்திற்கு வந்தார். அங்கு ரயில்வேஸ்டேஷனில் முனிசிபல் சேர்மென் திரு. தம்மண்ண செட்டியார் அவர்களாலும் ஜில்லா போர்ட் வைஸ் பிரசிடெண்ட் திரு ராஜமாணிக்க பண்டாரம் அவர்களாலும் மற்றும் ஊர் பிரமுகர்களாலும் மேள வாத்தியத்துடன் வரவேற்கப்பட்டு மோட்டாரில் ஊர் கோலமாக தேவாங்க வாசகசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் திரு.ராஜமாணிக்கபண்டாரம் அவர்கள் தலைமையில் திரு. நாயக்கருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதும் திரு நாயக்கர் மேற்படி வாசகசாலையில் சர் தியாகராயரவர்கள் படத்தை திறந்து வைத்தார் திரு நாயக்கர் மீது சில பாட்டுகள் பாடப்பட்டன. பிறகு நாயக்கர் சுயமரியாதையும் பகிஷ்காரமும் என்பது பற்றி நீண்ட சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்

நாயக்கரின் சிறிய தகப்பனாருக்கு மிகவும் காயலாவானதால் உடனே இரவு எட்டு மணிக்கு சேலத்திலிருந்து புறப்பட்டு ஈரோடு வந்து சேர்ந்தார்.

திங்கட்கிழமை முதல் ஒரு வாரம் பகிஷ்காரப் புரட்டைப்பற்றி பிரசாரம் செய்ய சுற்றுப்பிரயாணம் செய்வார் 29ந் தேதி கூத்தூர் குருக்கத்தியில் இருப்பார்.

---

## மதிப்புரை.

### "சாரதையின் தந்திரம்"

"சாரதையின் தந்திரம்" என்ற புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இப்புத்தகம் "ஆனந்தவிகடன்"யின் உதவி ஆசிரியர் நண்பர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பட்டது. இப்புத்தகத்துக்கு ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முன்னுரையாக எழுதியிருக்கும் மதிப்புரையே போதுமானது. ஆயினும் நமது கருத்தையும் எண்டு வெளியிடுதல் மிகையாகாது.

இப்புத்தகம் "சாரதையின் தந்திரம்" முதலிய கட்டுப்புனை கதைகள் கொண்டதாயிருக்கிறது புனைகதையென்றால் புராணக் கதையன்று. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கில அநாச்சாரங்களைப் போதிக்கும் நாவல் போன்றது மன்று. ஆனால் தற்சமயம் நம் நாடு இருக்கும் நிலையை விளக்கி அதைச் சீர்திருத்தும் நோக்கம் கொண்டு உயர்ந்த கற்பனைகளால் ஒவ்வொரு கதையும் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

முதலாவது கதையாகிய "சாரதையின் தந்திரம்" ஒழுக்கம் தவறி நடக்கும் புருஷர்களை வழிக்குக் கொண்டுவர பெண்கள் கையாள வேண்டிய அற்புத முறைகளைப் போதிக்கின்றது. இரண்டாவது "சுபத்திரையின் சகோதரன்" என்னும் கதை வரதக்ஷணை என்னும் மாப்பிள்ளை விலையால் ஏற்படும் சமூகக் கொடுமைகளைக் கண்டிக்கிறது. மூன்றாவது "ஒன்பது குழிநிலம்" என்ற கதை கோர்ட்டு வியவகாரத்தால் நேரிடும் கேடுகளைக் காட்டுகிறது. நான்காவது "காங்கிரஸ் ஸ்பெஷலில் 'கோர சம்பவம்'" என்ற கதை காங்கிரசின் யோக்யதையையும் அரசியல் புரட்டையும் விளக்குகிறது. "தற்கொலை" என்ற கதை உத்தியோகப் பித்தாலும் ஆங்கிலப் படிப்பின் மோகத்தாலும் ஏற்படும் கஷ்டங்களைச்சாற்றுகின்றது. இவ்விதமாகவே மற்ற ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு சீர்திருத்தம் குறிக்கொண்டு, ஆடவர், பெண்டிர், ராஜீய வாதிகள், சீர்திருத்தக்காரர்கள் ஆகிய அனைவரும் படித்துணர வேண்டிய விஷயங்கள் நிரம்பியிருக்கின்றது.

வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்தல் அவசியம். 161 பக்கம் கொண்டது. விலை ரூ 0—12—0 சென்னை மயிலாப்பூர் சரஸ்வதி பிரசுராலயத்தில் கிடைக்கும்.

---

### கோயமுத்தூர் முனிசிபாலிடி. நோட்டீஸ்,

1928-29 ம் வருஷத்திற்கு முனிசிபல் சங்கத்தாருக்குச் சேர்ந்த சுங்கம் மார்க்கெட் முதலியவைகளின் குத்தகைகளை 1928 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 9 ம் தேதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விக்டோரியா டவுன் ஹாலில் கூடும் முனிசிபல் சங்கத்தாரின் ஸ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் விடப்படும்.

C. S. இரத்தினசபாபதி,
சேர்மேன், முனிசிபல் கௌன்சில்.

பாலக்குரிச்சியில்.

## போலி பார்ப்பனர்களின் வேஷம்.

பாலக்குறிச்சி கிராமத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சன்னிதானத்தில் ஏகாதசி உத்சவத்தன்று அவ்வூருக்குப் பக்கத்தில் மிராசுதாராகிய வி. கோதண்டபாணி நாயுடு தாமே தேங்காய் உடைத்து பழம் முதலானதும் வைத்து கற்பூரார்த்தி செய்தார். இக்கோவில் அர்ச்சகரான ஒரு பார்ப்பனர் "இக்கோதண்டபாணி நாயுடுக்கு, தானே கற்பூரார்த்தி செய்த இத்திருவாளருக்கு, ஒருவாரக் கெடுவில் சோதனை உண்டுபண்ணுகிறேன்" என்று சபித்து ஒரு பெருங்கூச்சலிட்டார். அங்கிருந்தோர் யாவரும் மனம் திகிலடைந்தனர். சோதனை காலம் கடந்து அநேக நாட்களாயிற்று. சபிக்கப்பட்ட திருவாளர் நாயுடுவும் இல்லாத்தோர் யாவரும் சிநேகிதர்களும் உற்றார்உறவினர்களும் க்ஷேமமாகவே இருந்துவருகிறார்கள். இதனால், கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகு செய்வது ஓர் வகுப்பினருக்குத்தான் சொந்தமென்பது உண்மை அலலவென்பது வெளியாகிறது.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

சூரியனின் செங்கிரணங்கள் மேலே எழ எழ கடும்பனியின் கொடுமை தணிய ஆரம்பிப்பதேபோல் பகுத்தறிவின் சுவாலை அதிகரிக்க அவிவேகமானதும் நகைக்கத் தக்கதானதுமான அந்தப் பண்டையகால பௌராணிகப் பெருமைகள் சாகுந் தருவாயை அடைந்து விட்டனவென்பதற்குரிய அறிகுறிகள் தோன்றுகின்றன.

இப்பொழுதுதான் சிற்சில மக்கள் மதத்துக்காக மனிதன் என்னும் நினைப்பைமாற்றி மனிதனுக்காக மதம் என்னும் எண்ணத்தை மேற்கொள்ளத் தொடங்கி யிருக்கின்றனர். பூமி என்னும் பெண்ணும் வானம் என்னும் ஆணும் புணர்ந்ததென்றும அரசமரம் புருஷன் என்றும் வேப்பமாம் பெண்ஜாதி என்றும், அவர் இருந்த இடம் இமயமலை ஆயிற்றென்றும், அவர் ஓடின இடம் கங்காநதிஆயிற்றென்பனபோன்ற விபரீதவிசித்திர விஞேதங்களையெல்லாம் மிக்க பயபக்தியுடன் நம்பி இருந்த காலம் தொலைய ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு அறிவாளிகளும் மதம் என்பதைத் தங்களின் உயர்ந்த பகுத்தறிவின்மீதே நிலைநாட்டி ஆராய்ச்சி செய்ய முற்பட்டிருக்கின்றனர். இதன் பயன் பன்னெடுங் காலமாய் ஆரிய வர்க்கத்தாரின் சாஸ்திரமென்னும் நுகத்தடியின்கீழ் கழுத்தை மாட்டிக்கொண்டிருந்த திராவிட மக்களை கண்விழிக்கச் செய்துவிட்டது. அப்படிப்பட்ட உயர்ந்த ஆராய்ச்சியன்றோ நமது திரு நாயக்கர் அவர்களையும் சுயமரியாதைப் போரில் இறங்குமாறு செய்வித்தது,

மதம் என்னும் பொக்கிஷத்தை பகுத்தறிவென்னும் திறவுகோல் கொண்டு திறக்கும் நாள் எந்நாளோ அந்நாளே மானிட வர்க்கம் சுகமடையும் நன்னாளாகும்.

K. A. அப்துல்ஹை.

மலாய்நாட்டில்

## ஓர் பார்ப்பனனின் மோச சம்பாத்தியம்

இவ்விடத்தில், விவாகம் ஆகாதவனும், யவ்வன வயதுள்ளவனுமாகிய ஓர் பார்ப்பனன், 'இவ்விடத்தில் ஜோசியம் சொல்லப்படும்,ஜாதகம் பார்க்கப்படும்,புரோகிதம்செய்யப்படும்' என்று விளம்பரம் செய்து நம் தாய் மக்களுக்குத் தெரிவித்து அவர்கள் சம்பாதிக்கும் சொற்ப சம்பாத்தியத்தையும் பறித்து விடுகிறார். அவர் விளம்பரப்படுத்தியிருக்கும் சாஸ்திரம் தெரிந்து சாஸ்திர உண்மையைச் சொல்லி ரூபித்து கூலிபெறுவதாயிருந்தால் நாம் ஆட்சேபிக்க மாட்டோம்- 1 ஆம் மடத்தில் சூரியன் இருக்கிறான் 2ஆம் மடத்தில் சந்திரன் இருக்கிறான், 3 ல் செவ்வாய் இருக்கிறான், 4 ல் புதன் இருக்கிறான், கஷ்ட காலம் தீர்ந்து விட்டது, நல்ல காலம் வந்து விட்டது, என்று உருட்டிப்புரட்டிப் பணம் பறித்து விடுகிறார். மெலெல்லாம் சாம்பலை பூசிக் கொண்டிருக்கிறார்- வேஷத்தை மெய்யென்று நம்பி நம் தாய் மக்கள் ஏமாந்து விடுகிறார்கள்- என்னே மோசம்! என்று மலாய் நாட்டில் ஜோகூர்பாரு என்னுமிடத்திலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்,

## சேரமாதேவி மருத்துவர்களின் கூட்டம்.

திரு ஆ. கந்தசாமி பண்டிதரவர்கள் வாசலில் 14-1-28ல் திரு மு. வேலு வைத்தியரவர்கள் தலைமையில் மருத்துவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கல்வி முன்னேற்றம் என்பது பற்றி பேசினார்கள். பின்னர் ராயல் கமிஷனை ஆதரிக்கும் தீர்மானமும், புரோகித பகிஷ்காரத் தீர்மானமும திருவண்ணாமலை கோவில் வழக்குக்கு திரு கண்ணப்பரவர்கட்கு பொருள் உதவி செய்வது என்ற தீர்மானமும் நிறைவேறின. கூட்டத்தில்நன்கொடைவசூலிக்கப்பட்டது.

'பணம் கொடுத்தவர்களின் விபரம்.

ஸ்ரீமான்கள

| | |
|---|---|
| ஆ கந்தசுவாமி பண்டிதர் | ரூ. 1 |
| மு. வேலு வைத்தியர் | 1 |
| சு. கணபதி பண்டிதர் | 1 |
| பண்டித ஆர். சங்கரநாராயண | 2 |
| ச. சுடலைமுத்து பண்டிதர் | 1 |
| சு. ராமய்யா பிள்ளை | 1 |
| பண்டித எஸ். ஆண்டியப்பா | 1—5 |
| ச. முத்தையா பிள்ளை | 1 |
| வி. எம். சுவாமி பிள்ளை | 1 |
| ஆக கூடிய ரூபாய் | 10—5 |

இந்த ரூபாய் பத்தும் ஷை வகைக்கு திராவிடன் பத்திரிகை மானேஜர் அவர்களுக்கு மணி ஆர்டர் அனுப்பப் பட்டிருக்கிறது இத்துடன் தலைவரவர்கள் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது. கூட்டக் காரியதரிசி,

வி. எம். சாமி பிள்ளை.

## இந்தியர் புறமதம் புகுவதேன்?

ஸ்ரீமான் S அருணாசலம் பிள்ளை 'லக்ஷ்மி' பத்திரிகையில் எழுதுவது

உற்று நோக்கி முற்ற உணர்ந்தோர்
மற்றோர் மதத்தை மனத்தினும் கருதார்.
எனினும் இந்தியர் இதர மதங்களில்
ஏராளமாக ஏகுதற்குரிய
காரணம் யாதெனக் கழறக் கேண்மின்!

இப்புவியதனில் இறைவன் வகுத்த
எப்பிறவியினும் ஏற்றமிக்குடைய
இந்தியராகும் மன்பதையாளர்
மேல் கீழ் சாதியாம் மேட்டிமை கொண்டு
தூற்றிச் சிலரைத் தூர நில்லென்பதும்
விலகு விலகென விலங்கொடு மதிப்பதும்
பின்பவர் புறமதம் போய்ப் புக்காராய்
அன்னிய நாட்டார்சாரத் தொடு
ஆங்கிலங் கற்று அரசாங்கத்தின்
உத்தியோகத்தில் உயர்த்தப்பட்டால்
சார்சா ரென்றே சமமாய்க் கொண்டு
தொண்டு புரிவதும் உண்டு களிப்பதும்
என்னென் றுரைப்போம்! என்னென் றுரைப்
[போம்!

இச்சாதி பேதமே சமய இழுக்காய்
எத்தனை மாந்தரை இதரமதங்களில்
இழுத்துச் சென்றது எண்ணவும் படுமோ!

அந்தோ! அன்னிய நாட்டார் அவர்தம் மதத்தை
அகில மெங்கும் பரப்பும வாவால்
செய்யும் சூட்சி வையகத் தறிந்தும்
சித்தனும் நிமலன் நீழ் நில வாழ்வில்
பக்தராய்க் கொண்டு முக்திய ளித்த
இல்லறம் துறவற மிரண்டின் வழியே
இறைவன் மதமல ரெய்திய பல்லோர்
அத்தனை பெயரையு மாராய்ந்து பார்ப்பின்
எங்குலத்தவரென இறை எண்ணியதோ!

அவர்தம் ஒழுக்க முறையால் உயர்வு பெற்றமை
உண்மை நூல்கள் உணர்த்தக் கண்டும்
ஆங்கில ஆட்சி அவ்வழி நின்றும்
நாமேன்! நடுவிலா நமன்போல்
கிட்டூரமாக நின்றிட வேணும்
இவ்வாறிருப்பின் இந்தியர் பல்லோர்
ஆண்டுதோறும் அயல்மதமேகி
புறச்சமயத்தொகை பூமியில் மிகவே
இந்து சமயம் இருந்தெடந்தெரியா
திறந்து படுமென இயம்பவும் வேண்டுமோ!

ஆதலின் மேதையீர் ஆண்டனமைப்பில்
கீழ்மே லென்னும் கிளைகள் வேண்டாம்.
தாய்நாட்டினரைச் சமமாய் மதித்தே
உண்மை வழியை உலகிலுணர்த்தி
ஒழுக்கமுறையா லுயர்கதி பெறவும்
எல்லாம் வல்ல இறைவனிணையடி
என்றும் ஏத்தி நின்று தொழுவோம்.

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற விதைகள் செடிகள்

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணு 8 முதல் அணு 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0 10 பாக்கெட் 1-4-0 காட்டுக் காய்கறி 20 2—8—0 சு. கொ. இ. காதர்மீரா சாயபு, ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

7 ம் பக்கத் தொடர்ச்சி

பற்றுமொன்று இங்கு கூறிக்கொள்வது எனது கடமையாகும். நம்மவர் தமிழ்வட மறைகள் கூறுவன இன்னின்னவை என அறிந்துகொள்ளாமலேயே அவை உரியனவை என்க் கருதிக்கொண்டிருப்பது இயல்பாகிவிட்டது. எதையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமலேயே அதை மேலானது என - எண்ணிக் கொண்டிருப்பது பொருத்தமுடைமையுமாகா. அறிவுடைமையுமாகா. கோவில் முதலிய இடங்களில் மறைகள் ஓதுவதைப் பலரும் பார்த்திருக்கலாம் - அவை ஓதுபவரை அணுகி அவற்றின் பொருள் என்ன! எனக்கடாவின் தெரியாது, எனவோ! என்ற விடைகளைப் பெறலாம். இது அன்னாரின் அறிவைப்பலப் படுத்துகிறதா என்பதை நேயர்களே அறிந்து கொள்ள விட்டுவிடுகிறேன் - மறைகள் தொன்மைவாய்ந்தன எனக்கூறப்படுகின்றது - இதையானும் மறப்பேனல்லன் - அவ்வளவில் தொன்மைவாய்ந்தகாலேயே ஒன்று உயரியதாயிருந்து விட முடியாது - என்பதையும் தெரிவித்துக் கொள்வது எனது கடமை -

பல அறிஞர் மறைகளை தமிழ்மொழிக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கூறுகிறார் என்றாலாயிருப்பினும் அதில் நல்லன உள வேற் தமிழுக்கு கொண்டு வருவதைப்பற்றி சிறியேனுக்கு ஆட்சேபனையின்று - ஒருநூல தீயன கொண்டிருப்பது எனபதைத் தெரிந்து கொண்டும் அந்நூலை மொழிபெயர்த்தல் வேண்டும் என்பதையே யான் எதிர்க்கிறேன் மறைகளுடன் ஆரியர்களால் ஆக்கப் பெற்ற நூல்களில் பல . வெறுக்கத்தக்க கொள்கைகளையும் தன்னலப் தந்திரம் சூழ்ச்சி இன்னோரன்ன இயல்புகளையே கொண்டு வாழ்வு நடாத்துவாரின் நூற்களில் உயிர்க்குறதி பயப்பன இருக்குமா அல்லது உயிர்க்குறுதி தருவன இருக்குமா என யான் கேட்கிறேன் மறைகளை மொழிபெயர்ப்பின் இது போது நம்ம தமிழர்க்கு உள்ள சொற்ப அறிவும் சுயமரியாதையும் இல்லாது போய்விடும் என்பது எனது கவலையுமாகும் - ஒழுக்க நெறி முதலிய அறங்கள் குறித்துக்கூறும் நூற்கள் நம்மிடை இதுபோதுள்ளவையே சாலும் - வேனயதேயங்களிலுள்ள வைத்தியம் விஞ்ஞானம் வணிகம் இன்னோரன்ன பொருள்கள் பற்றி அறிவிக்கும் நூற்களை தமிழுலகுக்கு கொண்டுவரின் பெரிதும் அறம் தருவதாகும். ஆரிய மறைகளை தமிழுக்கு மொழி பெயர்த்தது அநாவசியமான பொருட் செலவையும் அறியாமையையும் வெறுக்கத்தக்க ஒழுக்க நெறிகளையும் பெற்று இடர்ப்படுதலினும் வாளாவிருந்திடல் அறிவுடைமையாகும் - பிறநாட்டு நூற்களை மொழிபெயர்த்தல் தமிழருக்கு நன்றுசெய்வனவாகும் - ஆரிய மறைகளை மொழி பெயர்த்து இடர்ப்படல் வேண்டாம்! வேண்டாம்!! ஆரிய மறைகள் ஒழிக - தென்மறை ஓங்க பிழைகளுளவேற் பொறுக்க

> மநு நீதி போன்ற அதர்ம நீதி
> உலகில் மற்றொன்றும் இல்லை.

# தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டி தேர்தல் மோசடி.

தமிழ்நாட்டு தலைவர்கள் என்ற பெயரை சூட்டிக்கொண்டிருக்கும் ஸ்ரீமான்கள் ஐயங்கார், டாக்டர் நாயுடு, செட்டியார் ஜார்ஜ்ஜோசப் முதலியவர்கள் காங்கிரசில் நிர்வாகம் பெற்று அவ்வப்போது ஏகச்சாதிகாரத்துடன் வசூல் நடத்தி தமிழ் நாட்டு தொண்டர்களின் அன்பையும் ஆதரவத்தையும் மதிப்பையும் இழந்து விட்டார்களென்பது தமிழ் நாடு அறிந்த விஷயம். ஒவ்வொருவரும் தன்னந் தனியாயிருக்கையிலேயே பலதர அகிக்கிரமங்கள் செய்தார்களெனின் தொண்டர்கள் அவர்களிடம் சிக்கி படும்பாட்டை எண்ணவும் கூடுமோ? கல்வியும், செல்வமும், செல்வாக்கும் இருக்கிறதென்னும் அகம் பிடித்து எவ்வளவு நாட்களுக்கு இவர்கள் தமிழ் நாட்டில் ஆதிக்கம் செய்ய முடியும்? எல்லா ஜனங்களையும் எல்லா காலமும் ஏமாற்றி விடலாமென்று இவர்கள் நினைப்பின் அது பகற் கனவே ஆகும். இந்நால்வரும் தன்னந்தனியாயிருப்பின் தொண்டர்களை ஏமாற்ற முடியாதென்று ஒன்றாய் சேர்ந்தனர் போலும். இந்நான்கு தலைவர்களெங்கே நான்கு கோடி தமிழ் மக்களெங்கே? தொண்டர்களிடத்தில் அன்பும் மதிப்பும் காட்டாதவர்களுக்கு தலைவர்கள் என்ற பெயர் எவராலும் சூட்டமுடியாது. 20-12-27 ல் தமிழ் நாட்டு கூட்டம் கூடிய பொழுது இந்நால்வரும் ஒன்று சேர்ந்து பலவித சூழ்ச்சிகளால் தொண்டர்களை ஏமாற்றி தங்கள் கருத்தை ஒருவாறு பூர்த்தி செய்துகொண்டனர் - மோச வழியில் ஜெயமடைந்த இறுமாப்பு இவர்களுக்கு எவ்வளவு நாட்களுக்கு இருக்கும்? இத்தலைவர்களும் அடி பணிந்து வரக்கூடிய காலம் சமீபத்திலிருக்கிறது.

தேர்தல் விஷயமாய் 'தமிழ் நாடு' பத்திரிகையில் வெளி வந்ததில் தமது புது நட்புக்கு சாதகமாய் தேர்தல் விஷயங்கள் திருத்தி எழுதப்பட்டிருக்கிறது. கூட்டத்திற்கு 87 பேர்கள் வந்திருந்ததாகவும், தலைவர்கள் பிரேரேபித்த ஜாபிதாவுக்கு சாதகமாய் 56 பேர்கள் வாக்கு கொடுத்ததாகவும், சிலரே எதிர்த்ததாகவும்குறிப்பிடப்பட்டிருக்கிறது இவர்கள் குறிப்பிட்டபடியே 31 பேர்கள் தீர்மானத்திற்கு விரோதமாக இருந்திருக்க வேண்டுமென தெரிகிறது கூட்டத்தின் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டவர்களை சிலர் என்று சொல்லி விட்டால் போதும் போலும்.

உப தலைவர்கள் பதவிக்கு டாக்டர் நாயுடுவை எவர்கள் பிரேரேபித்தார்கள் என்று ஏன் குறிப்பிடவில்லையோ தெரியவில்லை. ஸ்ரீ முத்துரங்க முதலியாருக்காக வாபீஸ் வாங்கிக்கொண்ட டாக்டர் நாயுடு அவர்கள் ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாருக்காகவன் வாபீஸ் வாங்கிக்கொள்ள வில்லை? சில சொந்த விரோதங்களை முன்னிட்டு பூனையும் எலியும் போன்று சண்டைபோடுகின்ற தலைவர்களா தேச நன்மைக்காக உழைக்கக்கூடியவர்கள்? ஜில்லாவாரியாக பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சிலர்வாதாடிக்கொண்டிருக்கையில் தலைவர்களோடு ஒத்துழைக்கக்கூடியவர்களே, கமிட்டியில் இருக்கவேண்டுமென்றும் இதரர்களுக்கு இடம் கிடையாது என்றும் எந்த இராஜீய சாஸ்திரத்தில் இருக்கிறதோ தெரியவில்லை. அன்னியரோடு போர்புரிய வேண்டிய சமயத்தில் எல்லா கக்ஷியினரையும் ஒன்றாய் சேர்க்க வேண்டியதிருக்க ஒரே கக்ஷியில் சேர்ந்து ஒரே கொள்கைகளையுடைய சிலரை விலக்குவதினால் நம் தலைவர்களின் போருக்கு எவ்வளவு தேச பக்தி இருக்கிறது என்பது காதலாமலகம். ஐயங்கார் அண்டு நாயுடு லிமிடெட் கம்பெனியின் பயன் இதுதான் போலும். நாம் தலைவர்களை கூறி பயனில்லை. அதிகாரம் வகித்தவர்களும் பூமாலை சூட்டிக்கொண்டவர்களும் அதை ஒரு காலும் விட்டு விடத் துணிய மாட்டார்கள். ஆனால் இவ்வளவு உணர்ச்சி வந்து விட்டதாக கருதப்படும் இந்நாட்களில் பல பொது மக்கள் இத்தலைவர்களின் மாயவலையில் சிக்கிக்கொண்டு அவதிப்படுகிறார்களே என்பது தான் துயரமாக இருக்கிறது - அதிகாரவர்க்கத்தினர் எப்படி நம் தலைவர்களுள் சிலரை நாய்க்கு எலும்பு போடுவதுபோல் போட்டு இழுத்துக்கொள்ளுகிறார்களோ அதைப்போல சில தொண்டர்களையும் நம் தலைவர்கள் செய்கின்றனர் - அறியாத தொண்டர்கள் சில தலைவர்களின் நிழலை பார்த்த மாத்திரத்திலேயே அவர்களை சரணாகதியடைய நினைக்கின்றனர். உண்மை தேசாபிமானம் இருக்கும் தொண்டர்கள் இம்மாதிரி தலைவர்களைப்பற்றிக்கொண்டு தேசத்திற்கு உண்மைத்தொண்டு செய்யலாமென்று நினைப்பின் அது பகற் கனவே ஆகுமென்பதோடு இத்தொண்டர்களின் மானமும் போய்விடுமென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை.

காரியதரிசி பதவிக்காக ஸ்ரீமான்கள் ஜார்ஜ் ஜோசப், பஷீர் அகமத் இருவர் பெயர்கள் மட்டும் பிரேரேபிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க ஸ்ரீ ராஜாராம் பாண்டியாவின் பெயர்கொண்டு வரப்பட்டதாக தமிழ்நாட்டில் குறிப்பிட்டதற்கு காரணம் நாயுடு அவர்களுக்குத்தான் தெரிய வேண்டும், தமிழ்நாட்டு காரிய கமிட்டியின் அங்கத்தினர்களின் பெயர்களை ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் படித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீமான்கள் அண்ணாமலைப்பிள்ளை, குப்புசாமி முதலியார், பி முனுசாமி கவுண்டர், வேணுகோபால்நாயுடு பி. டி. சேஷாத்திரி ஆச்சாரி முதலியவர்களையும் பிரேரேபித்ததை எழுதாதுவிட்டதன் காரணம் தமிழ்நாட்டு ஜனங்களுக்கு தெரிந்தால் தலைவர்களின் சாயம் வெளுத்து விடும் என்ற எண்ணத்தினால் தான் எழுதாது விட்டனர் போலும். ஏழைகளின் சுதந்தரத்தை அபகரிக்கும் தலைவர்களும் பணத்திமிர் பிடித்தவர்களும் தொலையும்காலம்நெருங்கிவிட்டதென்பதை தலைவர் அறிவார்களாக

D N தீர்த்தகிரி முதலியார்

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

இடையூறு இல்லாமலும் பெறுதலும், அவ்வாறே ஆண் தன்னுரிமைத் தேவைகளை பெண்களின் இடையின்றியும், அவளுக்குத் துன்பமில்லாமலும் பெறுதலும், ஒருவர்க்கொருவர் உதவி செய்து வாழ்தலும், ஆண் பெண் சமத்துவமாகும். ஆண் உரிமை யாது, பெண்ணுரிமை யாது என்றும், தனித்தனி அன்னார் தேவை யாவை என்றும் ஆராயின், அது வேறொன்று விரித்தலாகும். ஆகலின் வள்ளுவப் பெருந்தகையாரின் சொற்றொடர்கள் நாம் மேலே காட்டிய சமத்துவத்தை அழிக்கின்றனவா எனின் இல்லை என்று சாற்றுவாம். எவ்வாறு என்று வினவிடின் விரித்துரைக்கின்றாம்.

பொதுவாக ஆண் உலகு வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் கொண்டு விளங்குகிறது. பெண் உலகு தயை அல்லது அன்பு; மென்மை, சாந்தம் அல்லது அமைதி, பேணுந்திறம் கொண்டு நிலவுகின்றது. இத்தன்மைகள் ஆண், பெண் என்ற சொற்களிலேயே பெறப்படுதல் காண்க. இவ்விருவகைக் குணத் தொகுதிகளில் எத்தொகுதி வளர்ச்சிபெற்றால் மனித சமுகம் நன்னிலையடையும் என்பது வெளிப்படையாம். அன்புடையார் தம் அன்பால் தூண்டப்பட்டு, பிறர்க்கு ஆட்பட்டு, அவர்க்கு வேண்டுவன செய்தல் இயற்கை. அதனால் தாய்மை போற்றிப் புகழப்படுகிறது. பெண்மகளிடம் இயற்கையில் அன்பு அமைந்தபடியாலன்றோ இறைவன் தாய்மை நிலையை—மக்களைச் சுமந்து பெற்று பேணி வளர்த்துவிடும் உயரிய பொறுப்பு நிலையை—அவர்பால் தந்திருக்கின்றான். நிற்க, இயற்கையில் அன்பு தன்னிடமில்லா ஆண்மகன், அதனை இயல்பிலே பெற்றுள்ள பெண்மகளைக் கொண்டு அவ்வன்பு பயில்கின்றான். ஆகவே 'தற்கொண்டான்' என்றால் தன் அன்பைக் கொண்டவன் என்பதே பொருளாம். ஏனை உடம்பு முதலியவற்றைக் கொண்டவன் என்ற பொருள் சிறப்பின்மை ஓர்க. அதுபோல ஆண்குணத் தொகுதியில் பெண் பயின்று சிறந்திட வேண்டுவதோர் குணமிருந்திடின் அவள் அக்குணத்தை அவனிடமிருந்து கொண்டு 'தற்கொண்டாள்' என ஆண்மகனால் சொல்லுப் பெறுவள். அன்பே மனித சமூகத்தை நிறைவாக்கும் என்பது எவர்க்கும் உடன்பாடாம். இன்னும் அன்பு பற்றி ஒருவர்க்கு உதவி செய்ய முற்பட்ட ஒருவனோ அன்றி ஒருத்தியோ, மற்றவரிடம் எதையாவது எதிர்பார்த்தல் முடியுமா? அவ்வாறு ஒன்றை எதிர்பார்த்து உதவிடின், அது கூலி பெறுதல் அன்றி அன்பாகுமோ? தலைசிறந்த அன்புடைப் பெண் அவ்வன்பை ஆண்மகனுக்குக் கொடுத்து அவனிடமிருந்து ஒன்று பெற வேண்டுமென்பதும், அதனால் அவள் 'தற்கொண்டாள்' என்று அவ்வாண்மகனால் சொல்லப்படல் வேண்டுமென்பதும், யாண்டிசையுமெனக. இங்கு நாம் கூறிய குணத்தொகுதி பெரும்பான்மைபற்றி கூறியதே ஒழிய ஆண் அறவே அன்பற்றவன் என்றாவது, பெண் பெரிதும் வீரமற்றவள் என்றாவது, கொண்டு மயங்கற்க.

இனித் "தொழுதெழுவாள்" என்பது பற்றி சிந்திப்பாம். 'தொழுகை' என்பது மெய்யால் தொழுகை, வாக்கால் தொழுகை, மனதால் தொழுகை என மூவகைத்தாம். மனதால் தொழுதலை தியானம் என்றும் வழங்குவர் மேலோர். 'எழுதல்' என்பது பல பொருள் படினும் சிறப்பாகத் தூங்கி எழுவதையே குறிக்கும்; உதாரணமாக 'சாத்தன் எழுந்து விட்டானா' என்று கேட்டபோது, தூங்கின சாத்தன் தூக்கத்திலிருந்து எழுந்து விட்டானா என்பதே பொருளாம். தொழுதெழுவாள் என்ற சொற்றொடர்க்கு தொழுதுகொண்டே எழுகின்றவள் என்பதே பொருள் ஆவதால் அங்கு மெய்யால் தொழுதலும், வாக்கால் தொழுதலும் முடியாமையின் மனதால் தொழுதுகொண்டே எழுகின்றவள் என்பதே செம்பொருளாம். மெய்த்தொழுகை, வாக்குத்தொழுகைகள் எழுந்தபின்பே கூடுமாகலின் மனதால் தொழுவதையே வள்ளுவர் கருதினார் எனக. 'எழுந்து தொழுவாள்' என்று கூறியிருப்பின் வேறும் கருதியிருப்பார் என்னலாம். மனதால் தொழுவதாவது கொழுநன் நினைவோடெழுதல், அதாவது எழுங்காலத்து முதற்கண் அவன் நினைவே வரப் பெறுதலாம்.

அன்பு தலைசிறக்கும் பெண் தன் அன்பைக் கொண்ட தலைவனை—கொழுநனை—நினைந்து கொண்டே எத்தொழிலும் செய்தல் என்பது அன்பறிந்தார்க்கெல்லாம் உடன்பாடாகும். இரவில் கடைசியாகத் தோன்றிய எண்ணமே, வைகறையில் எழும்போது முதலில் உதிக்கும் என்பது மனநூல் வல்லார்க்கு எல்லாம் ஒப்பமுடிந்த உண்மை. ஆகலின் தலைமகள் இயல்பாகத் தன்னிடம் அமைந்திருந்த அன்பைக் கொண்ட தலைவன்—கொழுநன் நினைவுடனேயே தூங்கி, அந்நினைவுடனேயே எழுதல் இயற்கை.

இவ்வியற்கை பெணமகள் தன் அன்பினில் முதிர்ந்து ஒருமை பெற்று ஓங்கிட உற்றவழி என்பதை அறிவுறுத்த 'தொழுதெழுவாள்' என்று மொழிந்தார் பொய்யாப்புலவர்.

ஆகவே வீரம் கொண்டு திரிந்த ஆண்மகனுக்கு தனது அன்பு கொடுத்து அவனை அன்பு நெறியில் பயிற்ற முற்பட்ட பெண் மக்களுக்கு அவன் தற்கொண்டான் என்ற எண்ணம் இருப்பது இயல்பு என்றும் தனது அன்பு வளர்ந்து ஒரு வழிப்பட்டு நிற்றலைத் தானே கண்டு கொள்ள தொழுதெழுகை முறை என்று அறிவுறுத்த தொழுதெழுவாள் என்றும் மொழிந்தார் நம் தேவர். இதில் யாதொரு இழுக்கில்லை என்பதும் உயர்வு தாழ்வு கொள்ள முற்படுவது மயக்க அறிவு என்பதும் கண்டு கொள்க. இக்கருத்தே எம் பெருந்தகையார் கொண்டது என்பதை அதிகார முறையிலிருந்து அறிக. இன்றேல் பரிமேலழகர் உரையால் அறிக.

சில புராணங்கள் நாயகி, தலைவி என்ற சொற்களால் காதல் நிலையில் சமத்துவங் கூறி கற்பு பற்றிக் கூறும்போது அதைப் பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுத்தி பதியாகிய எஜமானனைக் கடவுளாகக் கொள்ள வேண்டுமென்று கருத்துக் கொண்டிருக்கின்றது என மொழிகின்றார் சித்ரபுத்திரனார். எல்லாப்புராணங்களும் இக்கருத்தை நிலைநாட்டாவிட்டாலும் அவரெழுத்திலும் உண்மையில்லாமல் போகவில்லை. ஆகலின் வள்ளுவர் கற்பு பற்றி என்ன சொல்லுகிறார் எனச்சிறிது நோக்குவோம்.

பொது மறையாளர், கற்பு இரு பாலர்க்கும் இன்றியமையாத ஓர் சிறந்த குணம் என யாண்டும் அறைகிறார். வாழ்க்கைத்துணை நலம் என்னும் 6 ம் அதிகாரத்தில் பெண்மக்கள் கற்பை வலியுறுத்தினது போல் ஆண்மக்கள் கற்பு யாண்டு வலியுறுத்தப்பெற்றிருக்கிறதெனின் 'பிறனில் விழையாமை' என்னும் 15—ம் அதிகாரத்தும், 'வரைவின் மகளிர்' என்னும் 92—ம் அதிகாரத்தும் என்பதறிக. வாழ்க்கைத்துணை நலத்தில் அப்பெரியார்,

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை'— என்றும்

வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில்,

"நிறை நெஞ்சமில்லவர் தோய்வர் பிற
நெஞ்சிற் பேணிப்புணர்பவர் தோள்" என்றும் திருவாய் மலர்ந்து நிறை என்னும் சொல்லாலேயே இரு பாலர்க்கும் கற்புண்மை வேண்டுமென நிறுவுகிறார்.

இனி ஆணாவது பெண்ணாவது ஒரு தடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு அல்ல என்ற கருத்து கொள்ளக்கூடியதாகின்றது என்கின்றார். ஆண் பெண் மணத்திற்குப் பிறகும் கற்பு நிலை பெறும் இயல்புடைத்து என்பதை வேண்டுமேல் பின்னர் தெரிவிப்பாம்.

முடிவாக சித்திர புத்திரனுக்கு நாம் அன்புடனே தெரிவிக்கும் பணிவான வேண்டுகோள் என்னவென்றால் மேலே கூறப்பட்டவற்றில் ஏற்புடையதென அவர் கண்டவற்றை கொள்ளுவதுடன் இனிமேலாவது ஆன்றோர் நூல்களில் ஐயம் தோன்றுமாயின் அதை ஐய வினா முறை பற்றி பத்திரிகைகளில் எழுதுவதே நலம் என்பதாம்.

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்
உய்யார் பெரியார் பிழைத் தொழுகுவார்"

"உலகத்தார் உண்டென்பதில் லென்
பான் வையத்தலகையா வைக்கப்படும்"

---

குறிப்பு:—இம்மறுப்புக்குச் சமாதானம் அடுத்த வெளியீட்டில் சித்திரபுத்திரன் வெளியிடுவான்.

## சேலத்தில் ஆதிதிராவிட தலைவர்களுக்கு உபசாரம்.

சேலம் ஜில்லா தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜில்லா போர்டு மெம்பர் திரு. ஆறுமுகவேல், எடுகேஷனல் மெம்பர் திரு. R. செங்கோடன், முனிசிபல் கௌன்சிலர் திரு. K. வாதன் ஆகியவர்களுக்கு வக்கீல் திரு. சின்னய்யா பிள்ளை அவர்கள் தலைமையில் ஆதிதிராவிட மாணவர்களால் 15-வ ஒரு வந்தனோபசாரம் அளிக்கப்பட்டது,

காரியதரிசி, ஆதிதிராவிட ஹாஸ்டல்.

# வருணாசிரமக் கொடுமை.

செங்குளம் திரு சி. கனகசபாபதி
எழுதுவது

எல்லாம் வல்ல பரம்பொருளின் முன் நிற்பது ஆண் பெண் என்ற இரண்டு ஜாதியே. ஆனால் வர்ணாசிரமப் பேய்பிடித்த வைதிகர்களின் முன் நிற்பதுவோ எண்ணிறந்த ஜாதிகள். இவர் ஜாதித்துவேஷம் கொண்டாடுவதற்கு ஆதாரங்கள் எங்கே என்றுகேட்போமானால், வேங்காயம் தின்ற குரங்கு போல் விழிக்கின்றார்கள். வழக்கம் வழக்கமென்று வம்பு பேசுகிறார்கள். அதுவும் சரியாய் நடக்கிறதா என்று பார்த்தால் அப்படியுமில்லை. இப்பொழுது வர்ணாசிரமப்பேய் தலைகொண்டாட விட்டாலும் பாதிகூட ஒழிந்தபாடில்லை. இப்படி கொஞ்சமாவது குறைவதற்கு காரணம் யார்? எந்தக்கட்சியினர் என்பதுதான் நம் கேள்வி. இதற்கு நாடார்களும் ஜஸ்டிஸ் கக்ஷியும் என்று தலையங்கமிட்டு 'தமிழ்நாடு' பத்திரிகையில் எழுதிய ஸ்ரீ கே. துரைசாமியவர்களாவது 'இந்து மதமும் வைக்கம் வீரரும்' என்ற தலைப்பின் கீழ் 'நவசக்தி'யில் எழுதிய ஸ்ரீ கா. சோமசுந்தரம் பிள்ளையவர்களாவது சமாதானம் சொல்லட்டும். ஸ்ரீ கே. துரைசாமியவர்கள் ஜஸ்டிஸ் கட்சி காரியத்தில் ஒன்றும் செய்யவில்லையென்றும், ஜனங்களை மயக்க தீர்மானங்கள் செய்கிறதாகவும், எல்லாம் கட்சி சேர்ப்பதற்கான சூழ்ச்சிகளே என்றும் எழுதியுள்ளார். ஆனால ஸ்ரீ துரைசாமியவர்களை, வேறு எந்த கட்சியார் தாங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை அனுபவத்தில் கொண்டு வந்து பாமர ஜனங்களுக்கும் முன்னேற்றத்தை கொடுத்திருக்கின்றனர் என்று தான் கேட்கின்றோம். சமீபத்தில் சென்னையில் நடந்த காங்கிரஸ்கூட்டத்திலிருந்து காங்கிரஸ் கட்சியாரின் ஏமாற்றங்கள் புலப்படவில்லையா? எத்தனை தீர்மானங்கள் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக கொண்டு வந்திருக்கிறீர்கள்? காங்கிரஸ் பந்தலிலே வருணாசிரம மகாநாடு கூடுவதற்கு பிரயாசைப்பட்டார்களேஎன்றால் அவர்களின் உள் நோக்கமென்ன? இப்பொழுது காங்கிரஸ் கட்சி பிராமணர்கக்ஷியேயன்றி வேறல்ல. அதினால் அவர்கள ஜாதிக்குத்தான் உத்தியோக வேட்டை. மற்றவர்களுக்கோ ஒன்றுமில்லை. தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்தை. அவர்கள் நினைத்து இருந்தால் ஜாதித்துவேஷம் ஒழிய வேண்டுமென்ற ஒருதீர்மானமாவது நிறைவேற்றியிருப்பார்கள். கொண்டு வந்த தீர்மானத்தையும் நிராகரித்து விட்டிருக்கமாட்டார்கள். அவர்களுக்கெல்லாம் முக்கியமாக மூஸ்லீம்களிடம் தான் பயம். பிராமணரல்லாதாரைப் பற்றி கவலையே கிடையாது. முஸ்லீம்களையும் இரு பிரிவாக பிரித்து விட்டனர். இவர்கள் சூழ்ச்சிக்கு அவர்களும் மயங்கிவிட்டார்கள்.

ஆனால் நமக்கு இதைப்பற்றி கவலையில்லாவிட்டாலும் தேசத்தின் முன்னேற்றத்திற்கு இவைகள் எல்லாம் தடையாயிருப்பது பற்றி மனம் வருந்தாமலிருக்க முடியாது. இது இம்மட்டோடு நிற்கட்டும். ஜஸ்டிஸ் கக்ஷியாரின் செய்கைகளை சற்று கவனிப்போம்.

ஜஸ்டிஸ் கட்சியாரின் தீவிர உழைப்பாலும், பிரசாரத்தினாலும் ஒவ்வொரு பிராமணரல்லாதான் மனதிலும், ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவன் மனதிலும், சுயமரியாதை உணர்ச்சி ததத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியார், பசித்தவர்களுக்கு ஆகாரமிருக்கு மிடத்திற்கு வழியைக் காட்டுவது போல் நம் பன்னேற்றத்திற்குள்ள வழியைத்தான் காட்டுவார்கள். ஒரே மனிதனையாவது ஒரே வம்சத்தாரையாவது முன்னேற்றுவதற்காக சுயநலத்தோடு அவர்கள் உழைக்கவில்லை. அவர்கள் பிராமணரல்லாதார் என்ற கூட்டத்தார் எல்லோரும் முன்னேறுவதற்கான வழியைத்தான் செய்கிறார்கள். 'ஒருவனால் ஆயிரம் குதிரைகளை தண்ணீர்துறைக்கக் கொண்டுபோக முடியும். ஆனால் ஒரு குதிரையைக்கூட தண்ணீர் குடிக்கும்படி செய்யமுடியாது' என்னும் ஆங்கிலப்பழமொழிக்கொப்ப ஒவ்வொருவருக்கும் அவர்கள் வழியைத்தான் காட்டுவார்கள். முன்னேற்றத்திற்குண்டான வழிகளைச் செய்துகொள்ள வேண்டியது நம்முடைய கடமையேயன்றி அவர்களுடைய கடமையல்ல. நாம் வீணாக பரோபகார சிந்தையோடு உழைக்கும் ஒரு கட்சியாரை குறை சொல்வதால் நமக்குத்தான் கெடுதல். "கொஞ்சமாவது ஜாதித் துவேஷம் ஒழிந்திருக்குமானால் அது ஜஸ்டிஸ் கட்சியாரின் தீவிர முயற்சியாலன்றி வேறல்ல. இவர்கள்தான் பிராமணீயத்தை ஒழிக்கவும் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து அரும் பாடுபட்டு வருகிறார்கள்.

இவர்களுடைய வழிகளில் எத்தனையோ கோடாலிக் காம்புகள் தடையாக நிற்கின்றன. ஸ்ரீமான் கா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், நமபெரியார் 'ராமசுவாமி நாயக்கர் அவர்களால் இந்துமதமே போச்சு' என்று கூக்குரலிடுகிறார். இவருக்கு இந்து மதத்தைப்பற்றி படிக்க வேண்டுமானால் நம் பெரியார் வெளியிடும் 'குடி அரசு' பத்திரிகை மாத்திரம் போதுமானது. இந்துமதத்தைப்பற்றி அதிகம் படித்ததாகப் பெருமை பேசிக்கொள்ளும் இவர் இந்து சாஸ்திரத்தை எவ்வளவு கறறிருந்தாலும் பிராமணர் முன்னுக்கு இவர் சூத்திரர்தானே. இவர் சூத்திரன் அல்ல என்பதற்கு இவர் மதத்தில் ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அந்த ஆதாரத்தை இவரது சகோதரர்களான பிராமணர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா? அல்லது அரசாங்கமாவது ஒப்புக்கொள்ளுகின்றதா? அல்லது இவரது கடவுள்களாவது ஒப்புக்கொள்ளுகின்றதா? அல்லது இந்த ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்களாவது ஒப்புக்கொண்டு தனக்கு கீழ் ஒரு ஜாதி இல்லை என்பதை காரியத்தில் ஒப்புக்கொள்ளுகின்றாரா.

அய்யோ பாவம் இவரின் இந்துமதத்தின் பெருமை என்னே! என்னே!! இவர் அறியாமைக்கு யாம் மனம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

நிற்க, பல அற்புதங்கள் தாண்டவமாடுவதாய் இவர் கொண்டாடும் மதுரையம்பதியில் சில வைதீகர்கள் சப்பாத்து அணிந்திருக்கும், புலாலுண்ணும், ஐரோப்பிய ஆடவர்களையும், மிஸ்மேயோ போன்ற பெண்மணிகளையும் தாராளமாக ஆலயத்துள் அழைத்துச் செல்கிறார்கள். அவ்வமயம் தாகர்களான பல வைதிகர்களும் தலைப்பாகையோடு செல்லுகின்றார்கள். இவர்கள் தங்களுக்கு கூலி கொடுக்கும் ஆங்கிலேயர்களுக்குச் செய்யும் மரியாதை ஆலயத்துள்ளிருக்கும் சுவாமிக்குங்கூட செய்வதில்லை. தலைப்பாகையை எடுத்து விட்டால் ஆங்கிலேயர் மதிக்க மாட்டார்கள். தலைப்பாகையுடன் சுவாமி தெரிசனம் செய்தால் மரியாதையல்ல என்று பிறர்க்கு மாத்திரம் சொல்வார்கள். இருந்தாலும் இவர்களுக்கு மாத்திரம் சுவாமியைப் பற்றி அக்கரையில்லை. ஆனால் இவர்கள் கூட தாழ்த்தப்பட்ட இந்து என்று சொல்லும் ஒருவன் சுத்தமாகச் சென்று கூப்பிட்டால் தாகிற்குப் போகிறதில்லை. இவர்கள் புத்தி என்னே!

இம்மட்டோ! இன்னும் கோவிலுக்குள் ஏராளமான முஸ்லீம்கள் வியாபாரம் செய்கிறார்கள். ஆனால் அந்த இடத்திற்கு கூட சில இந்துக்கள் என்பவர்கள் அநுமதிக்கப்படுவதில்லை. இதைத்தான் என் ஆப்த நண்பரான ஒரு மூஸ்லீம் சோதரர்சொல்லி சிரிப்பதுமல்லாமல் இந்துக்களின் மடைமையையும் கேலிபண்ணினர்.

இம்மாதிரியான உருப்படிகளை வைத்துக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியார்கள் என்ன செய்வார்கள். உதாரணமாக - இவர்கள் முயற்சியால் தான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆதிதிராவிடர்களைச்சேர்த்தார்கள். பாலக்காடு கல்பாத்தி ரோட்டிலும் தாழ்த்தப்பட்டவர்களை நடக்க அனுமதித்தார்கள். இன்னும் அனந்தம.

ஆகையால் ஜஸ்டிஸ் கட்சியைக் குறை சொல்வது வீணேயாகும். அப்படிச் சொல்வதால் நமக்கே கெடுதல் உண்டாகும். அவர்களின் உதவியைக் கொண்டு நாம் சுயமரியாதையை உணர்ந்து பிராமணீயத்தையும் வருணாசிரமத்தையும் ஒழித்து முன்னேற்றமடைவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக,

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ட பெயரும் உண்டாகும். பிள்ளைகளைப் பெற்றோர்களிற் பலர் தற்காலத்தில் தமக்குக் கொள்ளிவைப்பதற்காகவும், குடமுடைப்பதற்காகவும், கருமாதி, திதி முதலியன செய்து, தம்மைப் பரலோகத்திற் அனுப்பவேண்டுமென்றும், பிள்ளைகளைப்பெற்றதாகஎண்ணிக்கொண்டிருக்கின்றனர். பிள்ளைப்பேற்றை விரும்பித் தவங்கிடக்கின்றவர்களும் "பிள்ளையில்லாதார்க்குப் புண்ணியலோகமில்லை" ஆகலாற் பிள்ளை வேண்டுமென்று வினைத்துத் தவங்கிடக்கின்றனர். இக்கொள்கை ஆரியர்களின் சுயநலங் கருதிய கொள்கையாகும். தமிழர் கொள்கை நாட்டின் நலத்திற்காகப் பிள்ளைபெற வேண்டுமென் பதாம் என்பதை முன்னரே கூறினோம். அத்தகைய பிள்ளைகள், முதல் முதல் தம் பெற்றோர் மகிழ்ச்சியடையுமாறு நடந்து கொள்ள வேண்டும். குழந்தையைப் பெறுகின்ற தாய் குழந்தையைப் பெற்றவுடன் அதன் இனிய முகத்தைக் கண்டவுடன் குழந்தை பெறுவதற்கு முன் அடைந்த துயரத்தை மறந்து மகிழ்ச்சி யடைவாள். அந்த மகிழ்ச்சியின் அளவையும், மேன்மையையும் அளந்து கூற முடியாது. அதுபோன்ற மகிழ்ச்சியைப் பிற்காலத்தில் தன் மக்களைப்பற்றி, உன் மக்கள் மிகுந்த அறிவுடையவர், நல்ல குணமுடையவர்கள் என்று பிறர் வந்து தன்னிடம் சொல்லக் கேட்பாளாயின் அப்பொழுது அவள் அடையும் மகிழ்ச்சி, பிள்ளையைப் பெற்றவுடன் அடைந்த மகிழ்ச்சியை விட மேலானதாகும்' ஆகையால் பிள்ளைகள் தம்மையாவரும் "சான்றோன்" என்று கூறும்படி நடந்து கொள்ள வேண்டும். இதனை (9) "தாய், தன் மகன் கல்வி கேள்விகளால் நிறைந்த நற்குண முடையவன் என்று பிறர் சொல்லக்கேட்டபோது, அம்மகனைப்பெற்ற காலத்திலடைந்த மகிழ்ச்சியை விட மேலான மகிழ்ச்சியை யடைவாள்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

மற்றும் ஒருவன் அறிவின் திறத்தைக் கண்டும், கொண்ட வேலையைத் திறமையோடு முடிக்கும் பெருமையைக் கண்டும், எல்லாமக்களிடத்திலும் அன்பு கொண்டு அவர்களுக்குச் செய்யும் ஊழியத்தைக் கண்டும், அவனை யாரும் கொண்டாடுவார்கள். அத்தகையவர்கள் ஆண் மக்களாயினும் சரியே, பெண்களாயினும் சரியே அப்பொழுது 'அறிவுடையவர்கள், இத்தகைய பிள்ளையைப் பெறுவதற்கு இவன் தந்தை எத்தகைய தவத்தைச் செய்தானோ, என்று கூறிப் புகழ்வார்களாம். இதுவேமகன் அல்லது மகள் தன் தந்தைக்குக் செய்யும் கடமையாகும். இதனை (10). "கல்வியுடையவனுக்கிய தந்தைக்குமகன் செய்யும் உதவி, தனதுஅறிவையும், ஒழுக்கத்தையும் கண்டவர்கள் இவனைப் பெறுதற்கு இவன் தந்தை என்ன தவத்தைச் செய்தானோ என்னும் சொல்லைப் பெறுதலேயாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

ஆகவே இதுகாறுங் கூறியவாற்றால் நாட்டின் நலத்திற்காகப் புத்திரனைப் பெறவேண்டுமேயன்றிக் கருமாதி செய்யவதற்கும், திதி கொடுப்பதற்கும், கொள்ளிவைப்பதற்கும், குடமுடைப்பதற்குந்தான் புத்திரன் வேண்டுமென்று நினைப்பது அறியாமை யென்பதும், அஃது ஆரியர் கொள்கை யென்பதும் அறிகின்றோம்.

இனம்! **1928.** இனம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928வருஷ காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால்செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஒளஷதசாலை கம்பெனி,
போஸ்டு முல்லச்சேரி, மலபார்.

## ஊர் வம்பு.

பூரண சுதந்திரம் பெற நமக்கும் விருப்பம் தான். ஆனால் அதை அடைவதற்கு வழி சென்னைக் காங்கிரஸ் காட்டவில்லையே! என்று 'மாடர்ன் ரிவியூ' ஆசிரியர்கேட்கிறார்.

ஃ ஃ ஃ

காங்கிரஸ், பள்ளிக்கூடச் சிறுவர் விவாதச் சங்கமாகி விட்டதென்று காந்திஜீ சொல்லுவது நீதியாகாது என்று ஸ்ரீ ஐயங்கார் சொல்லுகிறார்.

ஃ ஃ ஃ

ஸ்ரீ ஐயங்கார் கூற்றை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிறோம். காந்திஜீ அப்படிச் சொன்னது பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு நீதி செய்வதாகாததுதான்; பள்ளிச் சிறுவர்கள் அவ்வளவு தூரம் தங்கள் பொறுப்பை யுணராது தீர்மானங்கள் நிறைவேற்றுவதில்லை. ஃ ஃ ஃ

அதே கூட்டத்தில் பேசிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி திருவாய் மலர்ந்தருளியதாவது 'மகாத்மா காந்தியின் கண்டனம் காங்கிரஸின் மதிப்பைக்குறைத்து விடக் கூடியதென்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'

ஃ ஃ ஃ

ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும், அவருடைய சகாக்களும் காங்கிரஸின் மதிப்பில் அணுவளவேனும் பாக்கி வைத்திருந்தாலல்லவோ வேறு யாரேனும் அதைக் குறைத்தல் சாத்தியம்?

அக்கூட்டத்திலேயே பேசிய மற்றோர் உபந்நியாசகர் காங்கிரஸ் சுதந்திரத் தீர்மானம் செய்தது கூடப்போதாதென்று நான் கருதுகிறேன். புரட்சியை ஆதரித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றாராம்.

ஃ ஃ ஃ

'நவசக்தி'

சென்னையில்
"குடி அரசு"
கிடைக்கும்
முக்கியமான இடங்கள்.


1. முனுசாமி, நியூஸ் வெண்டர்,
பிராட்வே கார்னர்.

2. ஷண்முக முதலி,
அரிசி வியாபாரம்,
புரசைவாக்கம்.

3. எத்திராஜு முதலி,
வெத்திலைபாக்கு கடை,
திருவல்லிக்கேணி.

4. 'திராவிடன்' ஆபீஸ்,
மவுண்ட் ரோடு.

எங்கும் கியாதி பெற்ற
பழநி சி. எம். சாமி.
குருதாம்பா பஸ்பம்
ஒன்றுதான் உயர்தரமானது.



திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டன. ஆறாத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல்முதலிய எல்ல வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள்வந்தவண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும். 100வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 50. 50 வேளைக்கு ரூ25. ஏழைகளுக்குப்பாதிவிலை. வி. பி. வேறு.

நற்சாட்சி—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குரு தாம்பர பஸ்பத்தால் பூரண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேக வியாதியால் ஒண்ணரை வருடகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூரண குணமானான். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூரண குணமானான். ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர், மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீசர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,
C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை.
சென்னைபிராஞ்சு ஆபீஸ்:-முருகன் ஏஜன்சி, 43 அரண்மனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை

### திருவெள்ளூர்ப் புராணம்

சுத்த சைவராகிய அட்டாவதானம் சொக்கலிங்கப்புலவர் அவர்களால் இயற்றப்பட்ட எட்டுப்பிரதி சென்னை வாகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி அவர்களால் பரிசோதிக்கப்பெற்று சேலம் திருவெள்ளூரைச் சேர்ந்த குறிச்சி ஸ்ரீமான் ஆ. சிதம்பர உடையார் அவர்களால் சென்னை கோமில் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பட்டு வெளியிடப்பட்டது. சொற்சுவை, பொருட்சுவை, கவித்திறம் நிரம்பியது. விலை ரூ 1—4—0 வேண்டுவோர் சேலம் பட்டக்கார் அச்சியந்திர சாலையாருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

### தேவகோட்டை
### மாணவர் சங்கத்தின் 8-வது ஆண்டு விழா.

நிகழும் பிரபவ ஆண்டு தைத் திங்கள் 9, 10-ம் நாட்கள் ஞாயிறு திங்கட் கிழமைகளில் தமிழகத்துத் தலைவரும், பேரறிஞருமான சைவத் திருவாளர் தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் தலைமையில் திண்ணப்ப செட்டியார் ஊருணி வடகரை "நகரத்தார் மண்டபத்தில்" நடைபெறுகிறது. அவ்வமயம் அறிஞர் பலர் விரிவுரை நிகழ்த்துவார்கள் என்று அச்சங்கத்தினர் அறிவிக்கின்றார்.

### செங்குந்தர் மஹாஜன சங்கம்.
### கோயமுத்தூர்.

நாளது பிரபவ ஆண்டு தை மாதம் 19, 20 தேதிகளில் இச்சங்கத்தின் 15-வது மஹாநாடு கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த கொடுவாய் என்னுமிடத்தில் நடைபெறும். பிரதிநிதிக் கட்டணம் ரூபாய் 1-8-0 அங்கத்தினர்களாக வருஷசந்தா ரூ. 0-4-0. பிரதிநிதிகளுக்கு உபசாரணைக் கமிட்டியார் சாப்பாடு ஜாகை முதலிய வசதிகளைச் செய்துவைப்பார்கள். காரியதரிசி.


## டிடக்டாவ்ஸ்
அல்லது
## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவன் செய்யும் காரியங்களையும் அவன் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மணி ஆர்டர்களுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்,



## மின்சார ரசம்.

### சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது
உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

அநுபானமில்லை! மின்சார ரசம்.




இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்ற தென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்!

கேட்லாக் இனாம். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.



## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)



## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரகங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரகங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரகங்குள்ள சம்பிரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளிதினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை நெம்பர்களில் 2-½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஸ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 2-½ அகலம் 18 முழம் நீளம் பல விதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி, S. வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி & ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

### ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பெக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலேரின் அழகையும், அவர்களின் விநோத, நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளோஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்ச் வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ண ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசப்பாக்கம், மதராஸ்.

## இனம்! 1928-ஆம் காலண்டர் இனம்!

### துப்புரவான வேலைகள்.


எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு செயின், அரைஞாண்கொடி, செங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், சோடு வகையறாக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு வேஷ்டிகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சராப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம்
"சராப்" சேலம்

## டேபிள் டைம்பீஸ் இனம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுகளின் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன்பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்னர் வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

## விளம்பரம்.

### வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம். குறைந்த விகிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பெட்டி 119, மதராஸ்.

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள




## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

வெளி வந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அனுமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அண 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பைண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிலேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கல்யாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கல்யாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தகலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி கலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம், இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அபிப்பிராயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போலிபோன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

## வாஸன் புஸ்தகசாலை,

தபாற்பெட்டி நெ. 119

97. அன்னபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.